தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 2-11-57 | சனிக்கிழமை | இதழ் 18

கண்டவர் கூறுகிறார்!

"ப்ரயாக்!" தமிழகத்தில் பலர் கேட்டிராத பெயர்; "இந்தியத் துணைச் சரித" ஏட்டில் பொதிந்துள்ள இப்பழம் பெயருக்கும் தமிழக வரலாற்றிற்கும் தொடர்பில்லைதான். இன்லறய க்ல்விக்கு நியமிக்கட்பட்டுள்ள இந்திய சரிதம் விக்ரமாதித்தன் அசோகன், பாபர், அக்பர், சிவாஜி இவர்களைத்தான் சொல்லுகிறதேயன்றி ஒரு சேரனோ ஒரு சோழனோ ஆங்கு காண்பதெளிதா? எனவே "ப்ரயாக்" என்னும் பெயரைத் தமிழகம் அறிந்திருக்க எக்காரணமுமில்லை ...னினும் ஏகபாரதத்தாயின் ...அரவணைப்பில் கொஞ்சிக் குலா...வும் செல்வங்களுள் தென்னகம் ...ஒன்றென தேசியவாதிகள் ...உரைக்கின்றனர். இனம், மொழி, ...குணம், மனக்கொள்கை, கோட்...பாடு, கலை, கலாச்சாரம் பண்பு ...அனைத்திலும் நாம் வேறு அவர்...கள் வேறு. இணையா இரு ...துருவங்கள் சேராத நேர்கோடு...கள்! இத்தனைக்கும் விளக்கம் ...விதித்து வீறி வீறாய் விளம்பி, ...ட்டில் பதித்து நாட்டின் நற்...தமிழர் அறிந்துரைச் செய்துள்...ளனர் திராவிடத்தின்சீர்திருத்தச் ...செம்மல்கள். இவ்வுண்மையை என்போன்ற சிலர் வடநாடு ஏகி ஓரிரு வருடங்கள் வாழ்ந்த பின்னரே நன்குணரப் பெறுவர். (ஒரு சொல்! வாடையைத் தென்றலெனும் வடநாட்டுப் பாதந்தாங்கிகளுக்கு வடக்கெனும் சவக்காடு என்றும் மணம் குன்று மலர்ப்பூங்கா! அப்பரம தாசர்களுக்கு இவ்வனுபவம் விழிப்புணர்ச்சியையூட்டாது.)

மகாபாரத மாயஜால வீரத்தை அவர்கள் காணவில்லை. கடவுட் சக்தியை இந்துஸ்தானத்தின் எம்மூலையிலும் எதிர் கொள்ளவில்லை, பராசீகம், துருக்கி படையெடுத்தபோது ராமபாணம் தொடுக்கப்படவில்லை! அஸ்திரங்கள் மறைந்தன! ஓமகுண்டமும் யாகமும் ஒடிந்தகையென்பதை தெளிவுறுத்தின. புறங்காட்டியோடியவர், அடிமைகளாய் அமைந்தவர், நாட்டைக் காட்டிக் கொடுத்தவர் ஏராளம். இந்தியத் துணைக்கண்டம் துருக்கியின் தாழில் வீழ்ந்து ஞானஸ்நானம் பெற்றது. அத்திரு நாட்டில் ஒன்றே ப்ரயாக். ப்ரயாக் அலகாபாத் என மாறியது!

ஆஹா! நேரு வள்ளல் உதித்த நிகரில்லா விசும்பு. ஆசியப் பேரொளிக்கு வாக்குரிமையளிக்கும் அருள் நகர்! சமரசப் பிரியர் தவழ்ந்த சாரல்! வெள்ளையனை எதிர்த்த வேங்கை வாழ்ந்த குகை—சரிந்துவிழும் காங்கிரஸ் தோள்கள் நிமிர்ந்து கேட்கும் கேள்வியிது. அவர்களுக்குச் சொல்வேன், நேருவுக்கு நேர் உவமை அவர் வாழ்ந்த அலகாபாத் ஒன்றே! அலகாபாத் ஓர் நகரா நரகா என்பதில் எனக்கே அடிக்கடி ஐயம் தோன்றுவதுண்டு. இந்துமதச் சேற்றின் உற்பத்திக் கூடம் அலகாபாத்! ஆதாரம் அவசியமா? எழும்பூர் புகையிரத நிலையத்தில் "ராமேஸ்வர யாத்திரை" செல்லும் சாதுக்களை—புண்யாத்மாக்களைக் காண்பீர்கள். அழுக்கேறிய கந்தலில் உழலும் இதே அநாகரீக மக்களின் காட்சியை அலகாபாத் நகரெங்கும் காணலாம்.

வேளாண்மை! இன்னுவொழித்து இனியவை பிறர்க்கு செய்தல், தமிழனிடம் மட்டுமே காணுதற்குரியது இக்குணம். வடக்கில் வேளாண்மை என்பதற்கு விளக்கமுண்டோ அறிகிலோம். ஆனால் அலகாபாத்தில் கற்றவன் முதல் அற்றவன்வரை தன் பற்றை-வாஞ்சையை மற்றவரின் பணம், பதவிக்கேற்ப தரப்படுத்தும் தன்மையுடையவன். கல்லூரி மாணவர் தானும் இதற்கு விதிவிலக்கல்ல. பணக்கார மாணவனைச் சுற்றி வட்டமிடும் கழுகுத் தோழமை இவர்களுடன் பிறந்த குணம் போலும்! "ட்வீட் ஷார்க்ஸ்கின்" முதலிய உயர்ரக உடைகளுக்குத் தோழமையைப் பெறும் பேராற்றலுண்டு. அங்கே சுரண்டிப் பிழைக்கும் ஒரே கலையைக் கற்றாலே அங்கு வாழ்வுண்டு. இன்றேல் அடிமைத்தனம் இருட்கிடங்கு இவைதான் சன்மானம். ஏழ்மையின் நிறமறியா செல்வரும் செல்வத்தின் நிழலறியா வறியவரும் அலகாபாத்தில் இருப்பதால் இருதரத்தாரிடையும் இதயம் இல்லையோ என வியந்திட வேண்டியுள்ளது. அலகாபாத் செல்வர் இரந்து நிற்பவரை ரிக்ஷாவினின்றும் கீழிறங்கி ஏந்தி உதைக்கும் இணையில்லா பண்பினர்! இக்காட்சி அலகாபாத்தில் சர்வ சாதாரணமாகி விட்டது.

நான் அலகாபாத் செல்லுமுன் ஒரு வடவர், கலையின் பல வடிவங்களை அலகாபாத்தில் காணலாம் என்றார். அவர் பொய் புனைந்தார் என்பது நான் அங்கு புகுந்த போதுதான் புரிந்தது. நாளெல்லாம் உழைத்து உருக்குலைந்து மாலையில் கலையின்பத்தை இசை வடிவிலோ, நாடகம், சலனம்படம் போன்றவை உருவிலோ, இன்றேல் இயற்கை அன்னையின் எழிலுருவிலேனும் அனுபவித்துக் களித்திட உந்தியெழும் தமிழனிதயமும் (அத்தகு வழிவகைகள் அவனுக்கு அமைந்திலையெனும் குறை பெரிதே!) உழைத்து பொழுதிறங்குங்கால் கங்கை சாதுவிடம் - யமுனை சந்நியாசியிடம் மந்தரம் போன்ற இருட்கிடங்குகளில் வேதபாராயணம் கேட்பதை, இன்றேல் குடிசையில் முடங்கி கிடப்பதையன்றி வேறெதனையும் விரும்பா இதயமும் முற்றிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை! அலகாபாத் கடைத்தெருவில் ஒலிப்பெருக்கி இசைக்க அதனை அனுபவிப்போர் தமக்கெனவோ இசை இயற்றப்பட்டுளதெனக் கருதும் தனி ரகத்தைச் சேர்ந்தவராவர். கிராமீயத் தமிழரிடம் உள்ள நுண்ணிய இசையுணர்வு இந்நாட்டுக் கிராமவாசிகளிடம் காண்பதற்கில்லை. இந்துஸ்தான் இசையென்றோர் தனிக் கலைப் பகுதியுண்டோவெனின் வங்க இசையைத்தான் இவர்கள் இரந்து அதைக் கூட்டிக் குறைத்து இந்துஸ்தான இசையென அழைக்கிறார் எனலாம். இந்தியர்களுக்கே உரிய இசைப் பண் அமைவிலாக் காட்டுக் கூச்சலே தவிர வேறில்லை. கிராமியப் பகுதிகளில் கட்னி, நைனி, ஜான்சி இத்தார்சி முதலிய பகுதிகளில் சென்று ஆராயுமிடத்து இவ்வுண்மை விளங்கும். எனவே ஈரான், அரேபிய, பராசீக, வங்க, தென்...

வளமுறையில்லா வாழ்க்கையும் வரலாறு இல்லாக் கூட்டமும்!

தமிழகமும் வடநாடும் எந்த வகையிலும் இணைந்து வாழ முடியாது என்பதைப் பல ஆண்டுகளாக எடுத்துரைத்து வந்தும், இன்னும் ஒரு சிலர் அந்தப் பேருண்மையை விளங்கிக்கொள்ள முயற்சிக்கவில்லை.

எக்கட்சியிலும் சேராத தமிழ் இளைஞர் ஒருவர் இரண்டாண்டுகள் அலகாபாத் நகரில் தங்கி, அந்த வட்டாரக் கலாச்சாரத்தை சுவைபடத் தருகிறார் இந்தக் கட்டுரையில். கட்டுரையைப் படிக்கும் தமிழன் நிச்சயமாக ஒரு நீண்ட பெருமூச்சை விடுவான்.

[ஆ-ர்.]

னிந்திய, உருது இசையின் கலப்பையே இந்தி இசையென்கின்றனர். தமிழின்கண் பிறந்துள்ள தேனினிய இசைக்கும் இற்றைய வடஇசைக்கும் எத்தத தொடர்போ பொருத்தமோ எள்ளளவுமில்லை. ஆனால் சாஸ்திரீய "இந்தி இசை என அவர்கள் அழைப்பவை தொன்மையில் தமிழிலிருந்தவையே. இன்று அவர்களால் ராக் (இராகம்) எனப்படும் பண்கள் அனைத்தும் தென்னகத்தில் பண்டு குடிபுகுந்த வேதியர் தென்னிசை வல்லுனரிடம் இசை பயின்று, அவ்விசைதனை தமதுடமையாக்க வேண்டி, வடப்பெயரெனும் உரைகளிலிட்ட தமிழகப் பண்களே எனும் உண்மையை ஆய்ந்தாராயின் புலனாகும். தாய்ப்பண்கள் (மேள்கர்த்தா இராகங்கள்) வடக்கின் உடைமையெனும் தகவிலாகூற்று உண்மையெனின் இன்று தென்னகத்தைப்போல் அப்பண்கள் அனைத்திலும் அந்நாடு புலமை பெருமை இசைத்திட இயலாமை எவ்விசை மன்றத்திலும் வழங்காமை ஏன்? மேலும் வடதிசை மக்கள் தெற்கின் கானம் ஏதோ பல்லொலிகளின் ஒழுங்கிலா திட்டென்றும், அருவருப்பான காட்டொலியென்றும் நம்புகின்றனர். அதாவது கர்நாடக இசையைக் இக்கண்கொண்டு நோக்குகிறார் என்பதே! நாகரிகமிலா காட்டில் தானும் கச்சையுடன் பனையேறும் தமிழனே, காலைப் பொழுது கலப்பையேந்தி கழனியேகும் தமிழனே இசைக்கும் தென்பாங்கின் இனிமையும் கனிவும் புதுமையும் வடக்கின் அரங்க இசையில்கூட காண்பதற்கில்லையே! வியப்பல்லவா?

தமிழனிடம், சிற்பப் பெருமைக்கு உவமை கேட்பின் அஜந்தாவை, அக்ராவை குறிப்பிடுகின்றான். புதுமை விருந்தும் மெய்சிலிர்க்கும் உணர்வும், ஊட்டும் தென்னாட்டுக் கற்சிற்பக் காட்சிகள், உயர்நிலையெய்தியுள்ள இம்மாபெரும் கைத்திறச் செல்வங்கள் அவன் இதயத்தை ஈர்க்காததேனோ? அறியோம்! இதுகாறும் வடக்கு தனக்குரிய வகையில் பொறாமையினால், அழுக்காறினால், தென்சிற்பக் கலைக்குவியலையோ இதர கலைகளையோ பாராட்டியதே இல்லை. ஏதோ ஒரு சில பரந்த மனம் படைத்த வடநாட்டினர், இவ்வழியேகியபோது காட்சியைத் தத்தம் நூலில் சிற்சிலப்பகுதிகளில் சிதறவிட்டுள்ளனர். அவ்வளவே. அலகாபாத் மக்களுக்கே கலையுணர்வில்லையென்பது சாதாரண மக்கள் கண்டறியக்கூடிய உண்மை. ஆனால் அங்கு போலிக்கலாரசனை உண்டு. வியக்காதீர்கள்! இத்தகு கீழ் விகுதிகள் வடக்கில் இல்லாவிடின் எங்குதான் போகும்? படித்த சிலரும் உயர் 'அந்தஸ்து' போகிகளும் பிறர் வெளியுலகோர் பாராட்டுதலைப் பெறுவதற்கு என தம் கண்வலி பெருகு மட்டும் ஓர் புரியாத ஓவியத்தைக் கண்டு அதை மகிழ்ந்து பாராட்டுதல் போன்ற பாவனைகள் புரியவோ, அவர்கள் புரியாத ஓர் உயர்இசை அமைப்புண்டெனின் அதைக் கேட்டு உணர்ச்சி வசப்படுதல் போல் தலையையசைத்து இமையை மூடித் திறந்து போலி ரசிகத்தன்மையைக் காட்டவோ வடவர் தயங்கார். உண்மையில் ரசிக்கும் ஓரிருவர் கீழ்த்தர இசை ரசிகர்களேயாவர். வடநாட்டின் இக்கீழ்த்தர இசை ரசிகத்தன்மையினாலும் பண்போ கொள்கையோ இலா இழிவான நாடக அனுபவத்தரத்தினாலும் இன்றைய இந்திய இசையும் திரையும், மட்டுமன்றி தமிழுலக இசையும் திரையும் அழிவுறும் நிலையெய்தியுள்ளது.

கீழ்த்தர எண்ணமும் போலி வீரமும், ஆங்கில படங்களின் முழுப் பெயர்ப்புமே இற்றைய இந்தியத் திரைக்கதைகளில் லட்சணங்களில்! அனுபவிப்பவரின் ரசிகத்தன்மை இழிவாக இருத்தல் இதற்கு முழு முதற் காரணம். வடவர் உற்பத்தி செய்யும் நல்ல படங்களுக்கே அங்கு ஆதரவில்லை. "ஜாக்தே ராவ்" (ஒருநாள் இரவு) என்ற உன்னத இலட்சிய மூட்டும் படத்திற்கு உலகப்பரிசு கிடைத்தது, நேயர்களுக்கு நினைவிருக்கலாம். சமூக ஊழல் சிலவற்றைத் தொடுதது கட்டுக்கோப்புக்குலையாது எழுதப்பட்ட இவ்வுயர் பண்பாடுடைய கதைக்கு அலகாபாத்தில் படுதோல்வி! "பாரிஸ்தான்," "சி. ஐ. டி." "சோரி சோரி" போன்ற டப்பா படங்களுக்கே அங்கு அமோக ஆதரவுண்டு!

அலகாபாத்தில் வெள்ளையர் விட்டகன்ற கலைக்காட்சி மன்றங்களும் கலைப்பொருள்களுமுண்டு. அவற்றைப் பற்றி பழுதுறுது பாதுகாத்து "பாரீர் பாரத நாட்டுக்கலை" என வருவோருக்குக் காண்பிக்கின்றார்கள், அலகாபாத் வள்ளற்குலம். ஒழிய தமிழகத்தின் தனியா கலையார்வமும், விலக்க விலக்க புதுமையெனத்தோன்றும் கலைப் புதையலும் ஆங்கு இல்லை.

★

அலகாபாத்தில் பொதுவுடைமையில் ஒரு பகுதியும் உண்டு. வியக்க வேண்டாம்! ஒரு வடவர் என்னிடம் வடநாட்டுப் பெண்களின் "பதிவிர்தா தர்மம்" எனும் மகிமையைப் புகழ்ந்துகொண்டிருந்தார். இப்பதிவிர்தாக்களின் பெருமை கூறும் அவர்தம் நாடு பரத்தையர் வாழ்வதற்கு ஏக போக அனுமதியளித்துளது. ஏன்? இதுதான் கற்புமிகு நாட்டின் பண்பா—எனக் கேட்டேன். சொல்ல மழுப்பினார். பொதுச் சேவை செய்து தத்தம் பணியை பழுதற ஆற்றிவிடுகின்றார்கள் இம்மகளிர். அலகாபாத்தில் "மிர்கஞ்ச்" எனும் தெரு தொழிலுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. திரௌபதியும் அகலிகையும் வாழ்ந்த நாட்டில் அவர்தம் வழி நடக்க இன்று ஒரு சிலரேனும் வேண்டுமல்லவா? இவர்களுக்கிடையில் நடனமாதர் என்பாரும் உண்டு. அந்நடனத்தைப் பற்றிக் கேட்பானேன்! கோரம்! நடனக் கொலை! எனினும் கலை என்ற திரை மறைவில் காமஇன்பம் பருகவென "சேட்"தரத்தினரும் இதர பணத்திமிரரும் செல்வர்! தமிழகம் இத்தகு அவலநிலைக்கு-கடைநிலைக்கு வராது கண்டு நாம் மன நிம்மதியை அடைய வேண்டியுள்ளது.

அலகாபாத்தில் அறிவு பெருகின், உண்மையுணர்வும் விழிப்புணர்ச்சியும் ஏற்படும் என்ற ஒரே காரணத்தால் கல்வியபிவிருத்தி அங்குமிங்கும் மட்ட நிலையில் தரப்படுத்தப்பட்டுள்ளது. 2% விகிதம் உத்தரப் பிரதேசத்தாரில்அறிவுள்ளார். அதாவது படித்தவர். எனினும் அவர்களுள் அறியாமையை ஒழித்து பகுத்தறிவின் வழிநடப்பவர் விரல் விட்டெண்ணும் அளவிலுள்ளர். அச்சிறு தொகையினரையும் கபோதிகளாக்கிட காங்கிரஸ் முழுமுயற்சிக் கொள்கிறது. தமிழ் நாட்டில் தெருக் கூட்டுபவர் காலையில் தினத்தாள் படிக்கும் காட்சியும், ஒரு சிலர் குறள் படிக்கும் காட்சியும் நம்மை ஓரளவு பெருமிதங் கொள்ளச் செய்கிறது. தமிழகத்தில் அறிவுப்பசி அழியவில்லை— என்று உண்மையை அறிவுறுத்துகின்றது. சீர்திருத்த இலக்கியத்தில் அறிஞர் முதல் மாணவர் ஊடே சாதாரண தொழிலாளர் ஈறாக ஆர்வம் காட்டுவதும், பழையன தள்ளிப் புதியன கொள்ளுதலும் போற்றத்தக்க நிலை கண்டுள்ளன. இவ்வறிவாற்றலும் ஆராய்ச்சியும் அலகாபாத் போன்ற இடங்களில் காண்பது முயற்கொம்பே. எழுத்துலகுடன் தொடர்பு கொள்பவரில் கணக்கர்கள் (Clerical Servants) கூட மிகக் குறைவு. "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற நன்னோக்கத்தால் அல்ல அறியாமை அச்சம் என்ற நீங்கா வியாதியால் பீடிக்கப்பட்டுள்ளதால் காங்கிரஸ் கட்சி-அதன் கொள்கை—இதுவரை அது செய்துள்ள முன்னேற்றங்கள் இவைகளிலெதையும் அறிந்திராத அப்பாமரர்கள் காங்கிரசுக்கு தம் மனமுவந்த ஆதரவைத் தருவதற்கு காரணம், அறியாமை அச்சம் இவையல்லாது வேறென்னவாகும்? சர்வாதிகாரத்தை — கொடுங்கோன்மையை தெற்கில் நிலைநாட்ட முடியாத காங்கிரஸ் வடக்கில் மிகவும் சாமர்த்தியமாக நிலைநாட்டிவிட்டுள்ளது. நாட்டின் விவகாரத்திலோ முன்னேற்றத்திலோ அக்கறையில்லா மக்களுக்கும் வாக்குரிமையாளருக்கும் அளிக்க வேண்டுமென்ற தெளிவும், அவ்வாக்குரிமையில், பெரும்பலனும், எங்ஙனம் விளங்கும்? உணவு உடை உறைவிடம் இவையனைத்திலும் தரக்குறைவுள்ள நிலையிலும் அவர்கள் ஒரு படியேனும் முன்னேற்றத்தைக் கருதி ஏற மறுக்கின்றனர். இல்லை! சோர்வுற்று ஊக்கமிழந்து நிற்கின்றனர். அருஞ்சுவையில்லா உணவு, அழுக்கேறிய கற்றைக் குப்பையும், செத்தையும் சேரும் தொட்டிலது போல் இல்லம். "இவ்வளவு மிருத்தலே போதாதா" என்ற மனத்திருப்தி கொள்ளும் அலகாபாத் மகன், இழிநிலை எத்தகையது என்பதை அறிந்தவனல்ல. அவர்களுக்கு விழிப்புணர்ச்சியூட்ட நல்மனம் படைத்தவர்கள் — சீர்திருத்தவாதிகள் இல்லை.

மாணவர் படித்துப் பட்டம் பெறுகிறார் எனினும் தன்னலக் குறிக்கோள் கொண்டவராயுள்ளர். தென்னாட்டு மாணவரின் மொழியார்வம் அவர்களிடை இல்லாத போதிலும் மொழி வெறி அவர்களிடமுண்டு. கல்வி கற்பவரில் ஆராயும் தன்மைமிக்கோர் குறைவு. பத்தும் பத்தும் இருபது என்று சொல்தலை அல்லது சடநூலின் ஒரு கணித முறையையோ கூற்றையோ வாய்ப்பாடமாக ஒப்பித்தலை மேற்கொண்டுளாரேயன்றி 10ம் 10ம் 20 ஆகும் முறையதனை விளக்கவோ சடநூற் கணிதத்தின் நுண் விதியை தெளிவுறுத்தவோ கணிதத்தினை ஆழ்ந்துணரவோ முடியாத கிளிப்பிள்ளைகளாய் 100க்கு 85 விகிதமேனும் மாணவர் உளர். தென்னாட்டினர் மீது இவர்களுக்கு நீங்கா மனத்தாங்கல்பொறாமை எழுவதற்குக்

— 11ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 4 ‖ 2–11–57 ‖ இதழ் 18

ஒற்றுமை வளர்ப்போம்!

பொதுப்பகைவர் சூழ்வதனை அறியா தாலே
பொன்னாட்டுத் தமிழினத்தார் தங்க ளுக்குள்
புதுப்புதிய பகைகாட்டிக் கொல்கின் றாரே!
பொதுநலத்தை வேரோடு சாய்க்கின் றாரே!
மதுத்திறத்துச் சாதியினால் தமிழர் நாடு
மாண்பிழந்த வரலாற்றை முடிப்ப தற்கோர்
புதுயுகத்தைக் காணோமோ? ஓரி னத்தின்
பொருந்தியதோர் ஒற்றுமையைப் பெறமாட் டோமோ?

கொண்டவனே தன்மனையை 'நாயே' என்றால்
குடியிருக்க வந்தவர்கள் 'பேயே' என்பார்!
சண்டையிலே நம்மிருவர் உடலஞ் சாய
'தத்தார்'கள் வருகின்றார்; ஏசு கின்றார்!
மண்டலமே! தென்பாண்டி மக்கள் உள்ளம்
மாறாதோ? நல்லுறவைப் பெறமாட் டாதோ!
எண்டிசையும் புகழ்மணக்க வாழ்ந்த காலம்
இனியொருநாள் நம்மிடையே வரமாட் டாதோ!

சோழகுலம் சளுக்கியர்பால் பெண்ணெ டுத்தும்
தொண்டைவள நாட்டோரின் தோகை தன்னை
வேழநிகர் பாண்டியர்கள் விரும்பிப் பெற்றும்
வேல்வேந்தர் விற்கொடியார் சேர நாட்டார்
சோழரொடு தொடர்பேற்றும், 'மருது சேர்வை'
தொல்புகழோர் நாயக்கர் பெற்ற செல்வம்
தாழைமகள் மீனாட்சி தனைம ணந்தும்
சரிதத்தில் ஒற்றுமையை வளர்த்த நாடே!

வேரறுக்குஞ் சாதியுலே விழுந்து விட்டாய்!
விம்மியழுங் குரல்கேட்க மறந்தும் போனாய்!
நீரறுத்த நிலம்போலப் பகைமை எண்ணம்
நின்இலத்தைக் கூறாக்கிக் கொடுமை செய்ய
போரடுத்த தோள்களெல்லாம் தினவெ டுத்துப்
புகழழித்தல் காண்கின்றாய்! வாழ்வி ழந்து,
சீரிழந்து நிற்கின்றோம்! ஆள வந்தோர்
திறமிழந்து நிற்கின்றார்! முடிவே இல்லை!

சாதியெனும் பகைஉணர்ச்சி வாழு மட்டும்
தமிழ்நாட்டின் முன்னேற்றம் கானல் நீரே!
நீதிமுதல் நெறிமுறைகள் பிறக்கும் தந்து
நிலைத்திருந்த பெருமையெலாம் மண்ணிற் சாயும்!
சாதியினால் நிம்மதியும் அழிந்தே போகும்
தலைமுறைகள் பலங்குன்றிச் சாயும்! அந்தச்
சாதியினைத் தவிர்த்தொன்றும் வாழ்வ தில்லை!
தமிழகமே! இனிஉனக்கு மீட்சி இல்லை!

இளங்கோவின் இலக்கியத்தில்...

சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காப்பியத்தை ஆக்கித் தந்த இளங்கோ அடிகள், தமிழகத்தின் சென்றகால வரலாற்றினையும் சில உட்குறிப்புகளால் பெறவைக்கும் திறம் மிக்கவர் என்பதைச் சிலம்பு காட்டுகின்றது.

கண்ணகியைக் கற்பரசியாக்கி அவளுக்குச் சேரன் செங்குட்டுவனும் வில்லரசன் ஒரு கற்கோயில் எடுத்தான், அவனது இளவல் இளங்கோ அடிகளாம் சொல்லரசன் அவளுக்கு ஒரு சொற்கோயில் எடுத்தான். அந்தச் சொற்கோயிலின்கண் ஒன்பான் சுவையும் ஒருங்கே திகழ்கின்றது. அதில் அவலச் சுவை ஒன்றினைப்பற்றியும், புலவரின் கவித்திறனைப்பற்றியும், அதன் மூலம் தமிழக வரலாறு என்னவாக இருக்கலாம் என்பது பற்றியும் காணலாம்.

சிலம்பில் 'துன்பமாலை' என்ற காதையில் கண்ணகியிடம் கோவலன் கொலைப்பட்ட செய்தி குறிப்பாகத் தரப்படுகிறது. கண்ணகியும் ஒருவாறு நிலையினைப் புரிந்துகொள்ளவே, அழுதாள், புலம்பினாள், விம்மினாள். தன் நிலை உணர இயலாத பெண்ணாய் இருக்கிறாள். இந்த நிலையில் இளங்கோவும் கதை வளர்ச்சியில் ஒன்றிவிடுகிறார். கண்ணகியுடன் தானும் ஒன்றி அழுகிறார். அதனால் பாட்டுத் தடைப்படவில்லை, இலக்கணம் ஒன்றவில்லை, மனம் போன வழி காவியம் போகின்றது.

> **"அவள்தான்,**
> **சொல்லாடாள் சொல்லாடாள்**
> **நின்றாள் அந் நங்கைக்குச்**
> **சொல்லாடும் சொல்லாடுந்**
> **தான்."**

வினைமுடிபு எங்கே என்று உரையாசிரியர்களால் உணர முடியவில்லை. பலர் பலவாறு பொருள் கூறுவர். கொண்டு வந்த செய்தியோ 'கண்ணகியின் கணவன் கோவலன் கொலைப்பட்டான்' என்பது. செய்தியைப் பெற எதிர்நிற்பவள் கண்ணகி. செய்தி கொண்டு வந்தவள் நிலையிலே இளங்கோ அடிகள் தடுமாறுகிறார். இதன் பொருளை ஒருவாறு பார்த்தால் "சொல்லவில்லை, சொன்னாள்-கண்ணகிக்கு; என்ன சொல்லுகிறாய், விளங்கக் கூறு" எனக் கண்ணகி வினவுவாள் போலவும் உரைசெய்வர். பிறிதொருவர் "சொல்லாடாள் - வாயினால் சொல்லவில்லை, சொல்லாடாள் நின்றாள் — மெய்ப்பாடுகளால் சொன்னாள்' என்பார் உரை செய்கிறார். இந்த மயக்கநிலை வரக் காரணம், இளங்கோ அடிகளின் கவிதையல்ல, அவரின் உணர்ச்சி வயப்பட்ட நிலையே ஆகும். அதன் விளைவே இம் மயக்கம்.

மயக்கநிலையினை விட்டு வெளி வந்த கவிஞர் அதே காதையில் 35 ஆம் வரி முதல் 45 ஆம் வரிகள் வரையில் கண்ணகியின் அவல நிலையைப் பட்டமிட்டுக் காட்டுவதன் மூலம் சென்ற காலத் தமிழகத்தின் சீரிய பண்பாட்டினையும் உய்த்துணர வைக்கிறார் என்பதை அறியலாம்.

> **"துன்புறு வனநோற்றுத்**
> **துயருறு மகளிரைப்போல்**
> **...............யான் அவலங்**
> **கொண்டழிவலோ"**

கணவன் இறந்தானாக மனைவி கைம்மை நோன்பினை நோற்றுத் துயரையும் பெண்டிரைப் போல 'நான்' வாழமாட்டேன் என்று தமிழ்ப் பெண் கண்ணகி கூறுகிறாள்.

— 10ம் பக்கம் —

சட்டசபையில் அண்ணா

ஆதி திராவிடர்களின் நலன்களில் தி. மு. க.வுக்கு ரொம்ப அக்கரை உண்டு. அவர்களுக்கு நன்மைசெய்வதற்காக சர்க்கார் அளவு மீறி ஏதாவது செய்தாலும், தி. மு. க. அதை ஆட்சேபிக்காது.

நன்னூல் நன்னூலல்ல !

2

'நன்னூல் நூற்பாவும் இயலும் அதிகாரமும் ஆகிய மூன்றுருப் படக்கிய பிண்டமெனும், தலையான பொருளதிகாரம் இல்லாமையின் முண்டமேயென்க'-இது நன்னூல் பற்றிய பாவாணரின் மொத்த மதிப்புரை, மொத்தக் குற்றச்சாட்டு. 'எழுத்தும் சொல்லும் மட்டும் கூறும் இலக்கண நூல்கள் எத்தனை விரிவுபட்டனவாயினும் நிறைவுடையனவாகா என்பது அவர் தம் வாதம். தமிழுக்குச் சிறப்புத் தரும் கூறு பொருளிலக்கணமே. அது கூறாத இலக்கணம் சிறப்புடையதன்று; தமிழுக்குச் சிறப்புடைய இலக்கணமாகமாட்டாது என்பதை யாவரும் ஒத்துக்கொள்வர். நன்னூலுக்குப் பிற்பட்ட இலக்கணங்கள் யாவும் பொருளிலக்கணம் உடையவையே. தொல்காப்பியத்துக்குப் பிற்பட்டு, நன்னூலுக்கு முற்பட்ட இலக்கணங்களில் பொருள், இலக்கணப் பகுதிகளைத் தனித் தனி கூறுபடுத்தி விரித்துக் கூறும் நூல்கள் பல. அது அவ்வளவு சிறப்புடைய இலக்கணப் பகுதியாகக் கருதப்பட்டது. தொல்காப்பியத்துக்கே எக்காரணத்தாலோ எழுத்தும் சொல்லும் கிடைக்கப் பெற்று, பொருள் கிடைக்கப் பெறாத நிலையில்தான் ஒரு பாண்டியன் தமிழின் நிலைபற்றிக் கவலை பட்டு, இறைவனருளால் ஒரு நூலாக்குவித்தான் என்று இறையனார் அகப்பொருள் பற்றி அந்நூலுரை கூறுகிறது. பாவாணர் இதனையும் எடுத்துச் சுட்டிக் காட்டியுள்ளார்.

கட்டுரையாளர் பொருளதிகாரத்தின் முக்கியத்துவம்பற்றிய இந்த வாதத்தை எதிர்க்கவில்லை. ஆனால் 'நன்னூல குறைவுடையதன்று, நிறைவுடையதே, பொருளதிகாரமும் அதில் உண்டு' என்றுமட்டுமே வாதிக்கிறார், அந்நூலின் சிறப்புப் பாயிரப் படிசிற்றரசன் சியசங்கன்.

**'அரும்பொருள் ஐந்தையும்
யாவரும் உணரத்
தொகை வகை விரியில் தருக'**

என்று கூறியதையும், நூலின் இறுதிப் புறனடைச் சூத்திரத்தின் உரையில் மயிலைநாதர் இந்நூல் ஐந்ததிகாரமுடையதென்று குறிப்பதையும் இதற்கு ஆதாரமாக அவர் எடுத்துக் காட்டுகிறார்.

நன்னூலில் இன்று நம்மிடம் இருப்பது எழுத்து, சொல் ஆகிய இரண்டு அதிகாரங்களே. ஐந்து அதிகாரங்கள் உண்டு என்று குறிப்பிடும் மயிலைநாதர் உரையில்கூட இரண்டு அதிகாரங்களும் அவற்றுக்குரிய உரையும் மட்டுமே கிட்டுகின்றன. மயிலைநாதர் குறிப்பன்றி ஐந்ததிகாரங்கள் இருந்தன என்பதற்கு வேறு ஆதாரமோ, சான்றோ கிட்டவில்லை. நூல் பேணப்பட்டு, இரண்டு அதிகாரங்கள் பேணப் பட்டபோது, 12-ம் நூற்றாண்டுக்குரிய இந்நூலின் மற்ற அதிகாரங்கள்மட்டும் தடமற்றுப் போவானேன் என்பது புரியுமாறில்லை.

ஐந்ததிகாரமே இருந்தனவாகக் கொண்டாலும், இன்றிருக்கும் நிலையில் பாவாணர் மதிப்பீடு தவறு என்று கூறமுடியாது. பிண்டம் என்பதற்கு எதுகையாக வந்த 'முண்டம்' என்ற சொல்தான் நன்னூல் பக்தர்களைப் புண்படுத்துவதாகக் கூறக்கூடியது.

நன்னூல் ஐந்திகாரங்களை உடையதாயிருந்தது என்பதற்கு வேறு ஆதாரங்கள் கிட்டும்வரை, சிறப்புப் பாயிரமோ, மயிலைநாதர் குறிப்போ போதிய வலிமையுடையன அல்ல என்றே நாம் கொள்ளத்தக்கது. ஏனெனில் 9-ம் நூற்றாண்டு முதல் சமஸ்கிருத மொழிப் புகுந்திட்டு முயற்சியுடன் முயற்சியாகத் தமிழ் இலக்கணமே சமஸ்கிருத இலக்கணத்தின் வழி வந்தது என்று நாட்டும் முயற்சியும் தமிழகத்தில் வளர்ந்தே வந்தது. பின்னாட்களில் 'பிரயோக விவேகம்' 'இலக்கணச் சொத்து' ஆசிரியர்கள் ஐந்திலக்கண முறையை ஏற்றுக்கொண்ட பின்னும் இக்கருத்தைப் பிடிவாதமாக உறுதிப்படுத்த அரும்பாடு பட்டனர். தமிழ் இலக்கணம் மட்டுமல்ல, தமிழ் எழுத்துக்களே சமஸ்கிருதத்திலிருந்து எடுக்கப்பட்டவை, தமிழ் ஒரு தனி மொழியன்று என்று வாதிட்டனர் அவர்கள்.

**'அஃறியும் ஐந்தெழுத்தால்
ஒரு பாடை என்று
அறையவே நாணுவர்
அறிவுடையோரே !'**

'சமஸ்கிருதத்தில் இல்லாதஎழுத்துக்கள் (ற, ன, ழ, எ, ஒ) தமிழில் ஐந்துதான் உண்டு. இவைமட்டும்தான் தமிழுக்குரியவை. இவைமட்டும் கொண்டு ஒரு தனி மொழியாய் தமிழ் சமஸ்கிருதமில்லாமல் எப்படி இயங்கி இருக்க முடியும்?' என்று வாதிட்டனர் மொழி நூல் கனவு காணப்படாத மடமைக்கால அறிஞரான 18ம் நூற்றாண்டைய இலக்கணப் புலவர்கள். இதில் வியப்பென்னவென்றால், இவ்வாதத்தை ஒரு சிறிதும் ஏற்றுக்கொள்ளாத 'இலக்கணவிளக்க' ஆசிரியர், சிவஞான யோகிகள் ஆகியோர் கூட அந்நாளில் சமஸ்கிருதத்தின் பெருமையில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்களே.

தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் பொதுவான எழுத்துக்களை இருமொழிக்கும் உரியவை என்று இயல்பாகக் கொள்ளாமல், சமஸ்கிருதத்துக்கே உரியவை என்று கொண்ட அந்நாளை இலக்கண நூலார் அறிவு கொண்டு, மொழி நூலறிவும் பகுத்தறிவும் உலவும் இந்நாளில சமஸ்கிருத பற்றுளரில்கூட நகையாடாதார் எவரும் இலர். ஆனால் இது மேலை மொழிநூலின் எதிரொலியாக வந்ததுமட்டுமல்ல, பகுத்தறிவுத் தெளிவாலேயே கொள்ளல் வேண்டும். ஏனெனில் சொற்கள் இருமொழிகளுக்கும் பொதுவாய் இருக்குமிடங்களிலெல்லாம் அவை சமஸ்கிருதமே என்று முடிவுகட்டும் வழக்கிலிருந்து அந்த மொழிநூலறிவு தெளிவு உண்டுபண்ணவில்லை. இருமொழிகளுக்கும் பொதுவான சொற்கள் யாவுமே சமஸ்கிருதம், தமிழல்ல என்று இன்றும் சிறந்த ஆராய்ச்சியாளர் என்று கருதப்படுபவர்களால்கூட எளிதாக முடிவு கட்டப்பட்டு விடுகிறது. அவை தமிழ்ச்சொற்கள் என்றும் அதே அளவு எளிமையாக வாதாடப்படக் கூடும் என்பதை அவர்கள் கனவு காணவில்லை. ஆராய்ச்சித் துறையில் கூட, இனப்பற்றுதலடிப்படையான நெடுங்கால நம்பிக்கைகள் ஆராயா முடிவுகளாக ஏற்கப்பட்டு விடுகின்றன.

இப்பின்னணிகளை மனத்திற்கொண்டு பார்த்தால், மயிலைநாதர் உரைக் குறிப்புக்கு முரண்பட நன்னூலில் எழுத்து, சொல் ஆகிய இரண்டு அதிகாரங்களே காணப்படுவதற்கு ஒரு விளக்கம் தெரிய வரும். தமிழிலக்கணம் சமஸ்கிருத இலக்கணத்திலிருந்தே வந்தது என்று நாட்டப் புகுந்த இனப்பற்றாளர்கள் முதலில் தொல்காப்பியத்தை முற்றிலும் வழக்கிழக்கச் செய்து, சமஸ்கிருதத்தைப் போலவே, இரண்டு அதிகாரங்களை மட்டுங்கொண்ட புதிய இலக்கண மரபை உண்டுபண்ண முயன்றிருக்கவேண்டும். ஏனெனில் சமஸ்கிருதத்தில் ஆதிஇலக்கணமாக அந்நாளில் கருதப்பட்ட பாணினீயம்—பரமசிவனால் பாணினிக்கு அருளப்பட்டதாகக் கூறப்படும் முதனூல்—எழுத்தும் சொல்லும் மட்டும் பகுத்துரைப்பது. யாப்போ, அணியோ, பொருளோ ஒரு சிறிதும் அறியாதது. ஆகவே தமிழுக்குத் தனித்தன்மை அளிக்க உதவும் பொருளதிகாரத்தை ஒழிப்பதன் மூலம் சமஸ்கிருத முதன்மைக்கு ஆக்கம் ஏற்பட வழியுண்டு. நன்னூலார் எழுத்தும் சொல்லும் பட்டுமே இது காரணமாகவே கூறிச் சென்றனராகலாம்.

பின்னாட்களில், தொல்காப்பிய மரபு அழியாமல், மூன்றதிகார மரபின இடைக்கால விரிவான ஐந்திலக்கண மரபு வலியுறவு பெற்ற பின், சிறப்புப் பாயிரமியற்றியவர் அக்குறையைமட்டும், அது ஐந்திலக்கணத்தின் சாரம் என்று மழுப்பியிருக்க வேண்டும். பின்னும் சின்னாட் சென்றபின் உரையாசிரியர் மயிலைநாதர் அம்மழுப்பல் போதாதென்று, அது முன் ஐந்திலக்கணமும் முன் உடையதாயிருந்து, பின் குறைபட்ட நூலாயிற்று என்ற நம்பிக்கையைப் பரப்ப எண்ணியிருத்தல் கூடும்.

ஐந்திலக்கண மரபு வலியுறவு பெற்ற பின்னாட்களிலும், சமஸ்கிருத முதன்மை வாதம் ஓயவில்லை என்பதை மேலே காட்டினோம். யாப்பு அணிகளுக்குச் சமஸ்கிருதத்தில் அலங்கார சாஸ்திரங்களில் மூல முதன்மை தேடி ஒருபெற்று மன நிறைவு நாடலாயினர். ஆனால் பொருளிலக்கணத்துக்கு அதுவும் தேடமுடியாது, அதை வாளா புறக்கணிக்கவோ, சிறப்பெழுத்து ஐந்தோடு சேர்க்க வேண்டிய தமிழர் தனி நெறியாக ஏற்கவோ முன்வந்தனர்.

பாணினீயம் வட திசையின் முதல் இலக்கண நூலல்ல என்று இன்று தெரிய வந்த பின், மேலே கூறிய சமஸ்கிருதப் பற்றுளர் வாதங்கள் வலிமை இழந்து வருகின்றன. சமஸ்கிருத அலங்கார சாஸ்திரமோ கி. பி. 9-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட வளர்ச்சியே யுடையது. முதல் அலங்கார நூலான தண்டியின் காவியாதர்சம் தமிழகத்திலே ஒரு தமிழனாலேயே இயற்றப்பட்டது.

ஆராய்ச்சியாளர் இன்னும் நுணுகி, இரு சார்பும் அலசிப் புதுத் தெளிவு காணும்வரை, பாவாணரின் முடிவே நேரிய முடிவு என்று கொள்ளுதல் தவறன்று. வருங்கால ஆராய்ச்சிகள் அதனை இன்னே வலியுறவு செய்யக்கூடும்.

நன்னூல் மீதுள்ள இந்தப் பொதுவான மொத்தக் குற்றச்சாட்டுடன் பாவாணர் அவர்கள் விடவில்லை. நுணுகிச் சென்று பல தவறுகளை எடுத்துக் காட்டவும் முனைந்துள்ளார். கட்டுரையாளர் இவற்றையும் தனித் தனி மறுக்கப் புறப்பட்டுள்ளார். ஆனால் மொத்தக் குற்றச்சாட்டும் அதன் மறுப்பும் புலமைத் துறை ஆராய்ச்சி சார்ந்தவை. அங்கே பாவாணரும் அவர் எதிரியும் இருவரும் ஒருவர் மீது ஒருவர் கைச்சண்டையே இடுகின்றனர். கட்டுரையாளர் அதில் அடைந்த தோல்வி சிறிது. பாவாணருக்கு எதிராக அவர் மயிலைநாதர் ஆதாரத்தை வலிந்து பற்றிக்கொண்டு உருள இடமுண்டு. ஆனால் பாவாணரின் நுணுகிய குற்றச்சாட்டுகள் மொழி நூல் சார்ந்தவை. இத்துறையில் அவர் முன் கட்டுரையாளர் மட்டுமல்ல உரையாசிரியர்களும் நன்னூலாசிரியருமே நிற்கமாட்டாதவர் ஆவார். அது அவர்கள் குற்றமும் அன்று. அவர்கள் அனைவரும் மொழி நூல் கருத்தில்லாத காலத்தவர்கள், அல்லது அக்கருத்தில்லாதவர்கள். மேனாட்டினரால் மொழிநூலுணர்வு மிக்கவர் என்று கருதப்பட்டு வரும் தொல்காப்பியருடன்கூட அவர் மல்லாடத் தயங்காதவர் ஆவார். மொழி நூலார் என்ற முறையில், அவர் ஆராய்ச்சிகளுக்கு அந்த உரிமையும் மதிப்பும் உண்டு. ஏனெனில் அது காலஞ் சார்ந்தது. தொல்காப்பியர் மொழி நூலுணர்வு ஓர் உயிர் மரபாயிருந்தது என்பது தெரியவரும் காலத்தில அவர் சிறப்பும் தமிழின் சிறப்பும் உலகிலே பெருமதிப்புப்பெறுவதற்குரியனவாயினும், தற்கால மேலை மொழி நூலுக்கு இருக்கின்ற உலக மொழி ஒப்பீட்டு வாய்ப்பு அந்நாட்களில் தமிழருக்குக்கூட இருந்திருக்கவே முடியாது.

- தொடரும் -

தேவநேயப்பாவாணர் அவர்கள் 'நன்னூல் நன்னூலா?' என்று கேட்டார். வித்வான் எஸ். பி. கெம்பிரமணியனார் அவர்கள் அதை மறுத்து 'நன்னூல் நன்னூலே' என்றார். நமது பன்மொழிப் புலவர் அவர்கள் 'நன்னூல் நன்னூலல்ல' என்று கூறி பாவாணரை ஆதரிக்கிறார். **[ஆ-ர்.]**

-பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை M.A., L.T.-

ஆட்டக்காரி!

பழுவேட்டரையர் கந்தன் மறவரின் கொலு மண்டபத்தை யடுத்த ஆடல் மன்று அழகோடும் ஆரவாரத்தோடும் காட்சியளித்தது. பழுவேட்டரையர், அமைச்சர்கள், புலவர்கள், படைத் தலைவர்கள், பெருமக்கள், விமலாதித்தன் முதலானோர் வீற்றிருந்தனர். ஜனத்திரள் ஆடல் மண்டபத்தை அடைத்துக் கொண்டிருந்தது. மக்கள் வாயிலிருந்து கிளம்பிய வார்த்தை ஒலிகள் செய்த சந்தடி அடங்கி முடங்குவதற்கு தயாரானது.

நக்கன் சோழ குல சுந்தரி என்னும் ஆடல் அழகி பொன்னணி பூண்டு, பொலிவோடும் உடல் நெளிவோடும் வலக் காலை முன்வைத்து அரங்கு புகுந்தாள். அமர்ந்திருந்தோர் வாய்கள் மூடிக்கொண்டன. விழிகள் ஒளி சிந்தி அவளை மொய்த்தன. அவளைத் தொடர்ந்து காந்தர்விகள் எனப்படும் இசைபாடும் ஏந்திழையர் வந்தனர்; இசைக் கருவி வல்லுனர்கள் வந்தனர். எல்லோரும் முறைப்படி மன்றில் வணக்கம் செலுத்தினர். காந்தர்விகள் அமர்ந்தனர். யாழ், குழல், மத்தளம், இடக்கை முதலிய இசைக் கருவியாளர்கள் காந்தர்விகளைச் சுற்றி அமர்ந்தனர். சோழகுல சுந்தரி அபிநயம் பிடித்து, ஆரம்ப நடனமான அந்தரக் கொட்டுவை தொடங்கினாள். தொடர்ந்து பல நடனங்களை ஆடினாள். கலை மடந்தையான அந்த அழகு சுந்தரியின் ஆடல் அனைவர் மனத்தையும் கொள்ளை கொண்டது.

பழுவேட்டரையர் பரிசில் வழங்கலானார். பரிசில் வழங்குமுன் அவர் சில வார்த்தைகள் சொன்னார். 'கலையும் அழகும் மிளிற எழிலாட்டம் ஆடினாள் சோழகுல சுந்தரி. 'ஆடற் கலைக்கே அழியாப் புகழ்தேடித் தருகிறாள். நமது வேண்டுகோளை ஏற்று சோழகுல சுந்தரியை பழுவூர் அனுப்பிய சோழப் பேரரசருக்கு நன்றி செலுத்துவோமாக! ஆடல் அழகிக்கு எப்பரிசு தரினும் ஈடாகாது. எனினும் இந்த தொங்கல் மகுடம், முத்து மகுடம், நவ மணியாலான பொன்வடம் முதலியவைகளை பரிசிலாக சுந்தரிக்கு வழங்குகிறேன்.''

சோழர் குல சுந்தரிக்குப் பெருமை தாங்கவில்லை. அடக்கத்தோடு சென்று பரிசு வாங்கிக் கொண்டாள். பரிசு பெறுவதற்கும் மக்கள் ஆரவாரம் செய்வதற்கும் பொருத்தமிருந்தது. சுந்தரி பரிசோடு திரும்பினாள். அக்கணம் எதிர்கொண்ட வார்த்தைகள் அவளை திணறச் செய்தன.

பழுவேட்டரையர் முதல் ஏனையோர் அனைவருங்கூடத்தான் அவ்வார்த்தைகள் கேட்டு துணுக்குற்றனர். அவ்வார்த்தைகளை பேசியவன் விமலாதித்தனே தான். அவன் பேச்சில் பயங்கரம் ஏதுமில்லை என்றாலும், வழக்கத்திற்கு விரோதம் இருந்தது. அவன் பேசியது இதுதான். ''பழுவேட்டரையரே ? அன்பனின் ஆசைக்கும் அனுமதி தரவேண்டும். ஆடற்கலைக்கே அழகும் புகழும் சேர்க்கும் சுந்தரிக்கு என் அன்பு காணிக்கையாக இந்த ரத்தினமாலையை அளிக்கிறேன்.''

விமலாதித்தனின் வேண்டுதலை நிறைபடுத்தும் வண்ணம் பழுவேட்டரையரின் பேச்சு அமைந்தது. ''விமலரே! வழக்கிலில்லாத ஒரு வழக்கத்தை வேண்டியுள்ளீர். பெருமைமிகு பேரரசிலிருந்து விருந்தினியாக வந்துள்ள தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற அனுமதியளிக்கிறேன்.''

புன்னகை பூத்துக் குலுங்க வேண்டிய இதழ்களில் முறுவல் குறுகுறுத்தது. சுந்தரியின் சுந்தர நயனங்கள் தான் சிரித்தன. மென்னடையோடு வந்து விமலாதித்தனின் பரிசை பெற்றுக்கொண்டாள். அவளின் விழிகள் ஒருமுறை ஏறெடுத்து விமலாதித்தனின் விழிகளோடு மோதிக்கொண்டன. பரிசில் பெற்றுத் திரும்பினாள். கணப்பொழுதில் அவள் இதயத்தில் ஆயிரமாயிரம் நினைவுகள் சிரித்தன. விமலாதித்தனின் எழிலுருவம் அவள் நெஞ்சில் சிரித்தது. இக்காட்சியை அவையோர் ஆயிரம் அர்த்தத்தில் கண்ணுற்றனர். அடுத்து காந்தர்விகளும், இசைக் கருவி வல்லுனர்களும் பரிசில் பெற்றனர். ஆடரங்கு அமைதி பெற்றது. ஆமாம், கூடியிருந்தோர் எல்லாம் கலைந்து போயினர். பழுவேட்டரையரும் விமலாதித்தனும் அரண்மனை புகுந்தன.

சோழ குல சுந்தரியின் உள்ளம் நினைவுகளால் நிறம்பியிருந்தது. உணர்ச்சிகளில் உத்வேகம் காணப்பட்டது. விழிகளில் கனவு மயக்கம் தெரிந்தது. பழுவேட்டரையரின் ஆடல் மன்று திரும்பவும் அவள் மனத்திரையில் நினைவாகிறது. தன்னுடைய ஆடல் அழகை எண்ணுகிறாள். நாணத்தால் மனம் கூசுகிறாள். அரசர் பரிசு வழங்கிய காட்சியை நினைக்கிறாள். அடுத்து— அவள் இதயம் இனிய ஆசை வெறியால் துள்ளுகிறது.

விமலாதித்தன் பரிசு வழங்கும் தோற்றம் காட்சியாகிறது. அவள் இதழ்கள் அவளையும் அறியாமல் விரிகின்றன. சிரிப்பை சிந்தாமல் மலர்விக்கின்றன. கன்னங்களின் ரத்தவோட்டத்தின் குது குதுப்பு தளும்புகிறது. முகம் மலர்ச்சியால் எழிலை பெருக்குகிறது. மனமோ வான மேகங்களைப் போன்று ஊர்ந்துசெல்ல ஆசைப்படுகிறது. அவன் அழகில் அவள் சுழித்து லயித்துப்போன விதம்....! அவளுக்கே அக்காட்சி இப்போது வெட்கமாக இருக்கிறது.

''தஞ்சையிலிருந்து பழுவூருக்கு விருந்தினராக வந்துள்ளாராமே! பெயர் கேள்வி உண்டு. கண்டது தானில்லை! அடடா...அவர்தான் எத்தனை அழகு!'' அவள் மனக் குரல் யாழின் நரம்புகள் அதிர்வதைப் போன்று அதிர்ந்தது.

''ஆடற்கலைக்கே அழகும் புகழும் சேர்க்கும் சுந்தரிக்கு'' எனும் விமலனின் வார்த்தைகளில் என்ன தான் இனிமை ததும்புகிறதோ! இந்த சொற்றொடர் அவள் மனக் குரலில் கணத்திற்குக் கணம் எதிரொலித்தபடியே யிருந்தது. அந்த வார்த்தைகளை தன் நினைவுகளோடு அணைத்து அணைத்து அவள் மகிழலானாள். ஆயிரமாயிரம் முறை அந்த சொற்களை ரசித்து ரசித்தும் அவளுக்கு சலிப்பே தட்டக் காணோம்.

''என்னங்க தேவி, ஒரே யோசனை போலிருக்கு?'' என்று வந்தாள் எடுத்த பாதம். அவள்தான் சுந்தரியின் அன்புக்குப் பாத்திரமான தோழி.

''ஒன்றுமில்லை, வந்து! எதையோ எண்ணிக் கொண்டிருந்தேன்.'' என்று குரலை இழுத்தாள், சுந்தரி.

''எதையோ எண்ணினீர்கள்! அதுதான் தெரிகிறதே! அதைத் தான் என்னவென்று கேட்கிறேன்'' என்றாள் எடுத்தபாதம் குறும்பாக.

''அதையெப்படியடிசொல்வேன்? எனக்கு ஏனோ வெட்கமாக இருக்கிறது'' என்றாள் சுந்தரி நாணியபடி.

''என்னம்மா இது? சொல்றதிலே என்னம்மா வெட்கம்? நினைக்கும்போது தோன்றாத வெட்கம் இப்போ எப்படியம்மா தோன்றும்? சும்மா சொல்லுங்கம்மா'' என்றாள் எடுத்தபாதம். அவள் பேச்சில் தொனித்த குறும்புத்தனம் சுந்தரிக்கு தெரியாமல் போகவில்லை.

''அந்த நவரத்ன மாலையை கொடுத்தாரே... அவரைப்பற்றித் தானடி சொல்கிறேன்...'' என்று அவள் நாணத்தால் நெளிந்தாள்.

''ஓ...ஓ.. விஷயம் இதுதானா? இதை முன்னாலேயே என்னிடம் சொல்லியிருக்கலாமே! அது சரிதாம்மா; அவருக்கு இப்போ என்ன?'' என்றாள் எடுத்த பாதம் கேலியாக.

''அவருக்கு ஒன்றுமில்லையடி; எனக்குத் தான்!'' என்றாள் சுந்தரி.

''அவரு நினைப்பு உங்களுக்கு என்னம்மா செய்யுது?'' என்றாள் எடுத்த பாதம்.

''போடி! உனக்கு எப்பவும் இந்தக் கேலி தான். அவரைப்பற்றி உனக்கு ஏதும் தெரியுமா?'' என்றாள் சுந்தரி.

''ஓ! நிறையத் தெரியுமே! மதனனைப் போன்ற தோற்றம். தேறலைப் போன்ற இனிய சுபாவம். மிகச் சிறந்த வீரர், தீரர், சூரர்-தங்களுக்கு ஏற்ற மாறர்!'' என்றாள் சிரிப்போடு எடுத்தபாதம்.

''போதும் நிறுத்தடி உன்பேச்சை நான் ஒன்றைக் கேட்டால் நீ ஒன்றை உளறுகிறாயே! அவர் சக்திவர்மனின் தம்பியா?'' என்றாள் பொய்க் கோபத்தோடு சுந்தரி.

''ஆமாம், தேவி?'' என்றாள் அடக்கமாக எடுத்தபாதம். அவளின் அடக்கத்தைக் கண்டதும் சுந்தரிக்கு 'அய்யோ' என்றாயிற்று.

''வேங்கி நாட்டிலிருந்து வந்து, சோழப் பேரரசரிடம் தங்கியிருப்பவர்கள், இவர்கள் தானே?'' என்றாள் சுந்தரி.

''ஆமாம், தேவி!' எடுத்த பாதத்தின் அடக்கமான பதில் பரிதாபப் படத்தக்கதாக இருந்தது.

''அவர் ஏன் பழுவூர் வந்திருக்கிறார்?'' கேள்விகளை தொடர்ந்தாள் சுந்தரி.

''அது தெரியாது, தேவி'' என்றாள் எடுத்தபாதம்.

''உனக்கு எதுதான் தெரிகிறது! அது தொலையட்டும், அவர் இங்கு வந்திருப்பதைப்பற்றி ஊரார் என்ன பேசிக்கொள்கிறார்கள், அதாவது தெரியுமா?'' என்றாள் சுந்தரி.

இராசேந்திரனின் அருமை நண்பராம். நமது பேரரசரின் பேரன்பைப் பெற்றவாராம். ஏன் சோழமன்னரின் குடும்பமே இவரிடம் அன்பும் பாசமும் வைத்திருக்கிறதாம்! எந்தப் பெண்ணும் விமலாதித்தரின் வடிவழகில் வசமாகிப் போவார்களாம். இப்படியெல்லாம் பேசிக்கொள்கிறார்கள். தேவி...'' என்றாள் பெருமூச்சோடு எடுத்த பாதம்.

சுந்தரியின் மனம் இன்பப் பொய்கையில் மூழ்கிப்போனது. நினைவுகள், எட்டாத தொலைவுகளுக்கெல்லாம் சென்று கொட்டாவி விட்டன.

''இன்னொன்று சொல்ல மறந்துப் போனேன். தேவி...''

''என்னடி, அது?''

''அதுதான் மிகவும் விசித்திரம், தேவி. உங்களையும் விமலரையும் சேர்த்துப் பேசுகிறார்கள். உங்களுடைய ஆடலிலும் அழகிலும் அப்படியே தன் இதயத்தை இழந்துவிட்டாராம்...! சதா தங்கள் ஆடலையும் அழகையும் குறித்தே குழம்பிக் கொண்டிருக்கிறாராம்....! தங்கள் நிலைதானும் அவருக்கும்!'' என்றாள் எடுத்த பாதம் சிரித்த வண்ணம். சுந்தரி நாணத்தால் குமைந்துப் போனாள்.

★ வேலை. எஸ். எழில் ★

— 8ம் பக்கம் —

இதுதான் திராவிடநாடு

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி

6

'உலகமெல்லாம் ஒன்ருக ஆகி வரும்போது ஏனப்பா நீ பிரிவினை முழக்கம் செய்கிருய்?' என்று பாரத போலித் தேசிய பக்தர்கள் திராவிட உயிர்த்தேசிய இயக்கத்தாரிடம் கேட்கிருர்களல்லவா? அதற்குத் திராவிட இயக்தார் பெறு விரிவான விளக்கம் எதுவும் கூறத் தேவையில்லை. பிரிவினை என்ற ஒரு சொல்லுக்குபதில் வேற்றுமை என்ற சொல்லைப் போட்டு அதே கேள்வியை அவர்களிடம் திருப்பிக் கேட்டுவிட்டால் போதும். ஏனெனில் அந்தக் கேள்வி கேட்க வேண்டியவர்கள் பாரத பக்தர்களல்ல, திராவிட தேசிய இயக்கத்தார்களே. அக்கேள்வி கேட்கப்பட வேண்டியவர்கள் திராவிட தேசிய இயக்கத்தவர் அல்ல, பாரத போலித் தேசிய வாதிகளே.

'உலகமெல்லாம் ஒன்ருக, ஓரினமாக ஆகிவரும்போது, ஏனப்பா நீ மட்டும் வேற்றுமை முழக்கம் செய்கிருய்?' என்று திராவிடர் பாரத பக்தரைக் கேட்டால் அவர்கள் கதிகலங்குவர், திணறுவர். அது அவர்கள் உண்மைச் சொரூபத்தை உலகுக்குக் காட்டிவிடும்!

பாரத பக்தர்கள் பாரதியின் பாட்டைக் காட்டி ஒற்றுமைக்கீதம் பாடுகிருர்கள். பிரிவினை ஒற்றுமைக்கு எதிரான பண்பு என்று வாய்கிழியப் பேசுகிருர்கள். ஆனல் ஒற்றுமைக்கு எதிரிடையான பண்பு பிரிவினையல்ல, வேற்றுமை! பிரிவினை ஒருமைக்கே எதிரானது. இதனை அவர்கள் சொல் புரட்டு மறைத்துக் காட்டுகிறது. ஒற்றுமைக்குப் பாடுபடும் இனம் திராவிட இனம்—ஊரிலும் சரி, சமுதாயத்திலும் சரி; நாட்டிலும் சரி; உலகிலும் சரி—அது இன வேறுபாடற்ற, நாட்டு வேறுபாடற்ற ஒற்றுமையையே—சரி சமத்துவ ஒற்றுமையையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதன் இலக்கியம், ஆரியக்குளறுபடியில்லாத நிலையில், அவர்கள் சமய இலக்கியம்கூட, இதற்காகவே போராடுகிறது. ஆனல் பாரத போலித் தேசீயமோ அதன் போலி நாகரிகமோ, இதற்கு நேர்மாருக, வேற்றுமையை, உயர்வு தாழ்வு அடிப்படையான ஒருமையை அதாவது சமத்துவ மற்ற ஒற்றுமையை, ஆண்டான் அடிமை ஒற்றுமையை, போலி ஒற்றுமையை, ஒற்றுமை என்ற தவருன பசப்புப் பெயரால் பொதுமக்கள்மீதும் மற்ற இனத்தவர்மீதும், தன் ஏகாதிபத்தியப் பிடியில் சிக்கிய மற்ற நாட்டவர்மீதும் போலிப் புலமைப் போர்வையிலோ, போலிச் சமயப் போர்வையிலோ, போலித் தேசீயப் போர்வையிலோ புகுத்திவிட முயற்சிக்கிறது.

'இன வேறுபாடு காட்டாதே' என்கிருர்கள் பாரத பக்தர்கள். ஆனல் திராவிடர் கேட்பது இன வேறுபாடல்ல, இன உரிமை, இன வேறுபாடற்ற சமத்துவம். பாரத பக்தர்கள் வெறுப்பது இன உயர்வு தாழ்வு வேறுபாடல்ல, 'இனம்' என்ற பெயர், இனங்கிவரும் சரிசம நிலை! அவர்கள் நாடுவது இன ஒற்றுமையல்ல, இன ஆதிக்கம், இன முதலாளித்துவம், ஓர் இனத்தை உழைக்கும் இனமாக்கி, அந்த உழைப்பினத்தை அடிமையினமாக்கி, உழையாத, தகுதியற்ற இனத்தை, மொழியை, நாட்டை அறியா உருவம் ஏற்றப் பார்க்கிறகளே அவர்கள்!

இனத்துக்கு இனம் வேற்றுமை, சாதிக்குச் சாதி வேற்றுமை ஆகிய நம் பழய வருணசிரம தரும வேற்றுமை போதாதென்று, பாரத பக்தர்கள் இப்போது வடதிசை தென்திசை வேற்றுமையையும் உயிர் வேற்றுமையாகப் பாராட்டுகிருர்கள். உண்மை உயிர்த் தேசியமான தெற்கு, போலிப் பொய்த்தேசியப் பரப்பான வடக்கு என்ற இயற்கை வேறுபாட்டைத் தலைகீழாக்கி, பொய்த் தேசியத்துக்கு உண்மைத் தேசியத்தைப் பலியிட்டு, முன்னதிலே பின்னதை அடக்கப்பார்க்கிருர்கள். பொருளில் நிழலை அடக்கினுல்கூடக் கேடில்லை — நிழலில் பொருளை அடக்கப்பார்க்கிருர்கள். தாமரைமலர் பூவல்ல, தாமரையின் நிழல்தான் பூ, தாமரை மலர்தான் நிழல் என்கிருர்கள். தாமரைக்கு மணமில்லை, அதன் நிழலுக்குத்தான் மணம் என்கிருர்கள்!

ஒற்றுமை என்ற பெயராலேயே வேற்றுமையை, சமரசம் என்ற பெயராலேயே இன வேறுபாட்டை, ஒருமை என்ற பெயராலேயே ஏகாதிபத்திய அடிமைத்தனத்தைப் புகுத்தி விடுவதில் பாரத பக்தர் 'சமர்த்தர்', அசகாய சூரர்'. அவர்கள் இன வேறுபாடு வேண்டாம் என்பர். ஆனல் இனமே வேண்டாம், இனப் பெயர் கூறி சமத்துவம் கோர வேண்டாம் என்பதே இதன் உட்கிடக்கைப் பொருள். இன எல்லையை அழித்துவிட்டு, ஒரு இனத்தவர் ஆண்டார்களாகவும் மறு இனத்தவர் அடிமைகளாகவும் இருக்கும் நிலைமீது திரையிட்டு, ஆண்டான் அடிமைகளாகவே அந்தக் கூட்டு நிலைத்திருக்கட்டும் என்று பல்லவி பாடுகிருர்கள். ஒரு இனத்துக்கு மட்டும் உரிமை, ஒரு இனத்துக்குமட்டும் கடமை என்ற அநீதியின் மீது அடிமை இனத்தவர் கருத்துச் செலுத்தக்கூடாது, அவர்கள் அறிவுக்கண் பட்டுவிடக்கூடாது என்பதே அவர்கள் சமரச கீதத்தின் 'தாத்பரியம்'. இனங்களிடையே காட்டப்படும் இதே சமரச கீதம்தான் அரசியல் எல்லையில் அவர்கள் தேசியகிதம் ஆகும். வடக்கு ஆளும் இனம், தெற்கு ஆளப்படும் இனம்; வடக்குக்கு உரிமை, செல்வ வளம், இயந்திரத் தொழில் வளம்; தெற்கு கடமையுடன், வறுமையுடன், குடிசைத் தொழில் பெருமையுடன் மன நிறைவடைய வேண்டும் என்பதே. அவர்கள் கோரும் போலித் தேசியம், போலி ஒற்றுமை, ஏக பாரதம் என்பதெல்லாம் இதுதான். வடநாடு வாய், வயிறு, தென்னுடு கால், கை, வால்!

திராவிட நாட்டுப் பிரிவினை என்பதிலுள்ள 'பிரிவினை' என்ற சொல்லை வாய்ப்பாக வைத்துக் கொண்டு பாரத பக்தர்கள் பகடையாடுகிருர்கள். பிரிவினைக்கு எதிரான சொல் ஒருமை என்பது அவர்கள் அறியாததல்ல, ஆனல் பிரிவினை வேண்டாம், ஒருமையே வேண்டும் என்று அவர்கள் கூறமாட்டார்கள். வேற்றுமை வேண்டாம், ஒற்றுமை வேண்டும் என்று கூடக் கூறமாட்டார்கள். பிரிவினை வேண்டாம் ஒற்றுமை வேண்டும் என்று பசப்புவார்கள். அவர்கள் விரும்பும் ஒற்றுமை, அதாவது ஒருமை, வேற்றுமையற்ற, சமத்துவமுடைய ஒருமைகூட அல்ல, வடக்குத் தெற்கு வேற்றுமை உடையது அது என்பதை அவர்கள் ஒற்றுமை என்ற சொல்லால்மறைத்துக் கூறவே விரும்புகிருர்கள். உரிமை வடக்கே, கடமை தெற்கே; ஆளுவது வடக்கு, ஆளப்படுவது தெற்கு—இதுவே அவர்கள் உள்ளத்தில் எண்ணும் ஒற்றுமையின் உருவம். 'நீயும் நானும் ஒண்ணு, உன் வாயில் மண்ணு, என் வாயில் சர்க்கரை' என்று சிறுவர் சிறுமியர் விளையாட்டாகக் கூறும் ஒற்றுமையே அவர்கள் திராவிடருக்கு ஆசை காட்டி அளிக்க விரும்பும் ஒற்றுமை!

திராவிட நாட்டுப் பிரிவினை என்ற தொடரில் 'பிரிவினை என்ற சொல் தேசியத்துக்கு எதிரான பிரிவினை என்ற பொருளில் வழங்கப்படவில்லை. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசியப் பிரிவினையையே அது குறித்துக் காட்டுகிறது. பிரிவினை வேண்டாமென்பவர்கள் தேசத் துரோகிகள், ஏகாதிபத்திய வாதிகள். பிரிவினை வேண்டுமென்பவர்கள்தான் உண்மை உயிர்த் தேசியவாதிகள். ஆனல் இந்தப் புண்ணிய பூமியில் நச்சுப் பாம்பு நல்ல பாம்பு என்று அழைக்கப்படுவதுபோல, பல கடவுளை நம்புவர்கள் மட்டுமே சூத்திரர்கள் என்று அழைக்கப்படுவதுபோல, மக்களிடம் அன்பில்லாதவர்கள், சாதி வேறுபாடு காட்டுபவர்கள் தான் கடவுளுக்கும் வேதங்களுக்குச் சொந்தமான வைதிகர்கள் என்று கருதப்படுவதுபோல, உலகை வெறுத்தவர்கள்தான் உத்தம முனிவர்கள் என்று நம்பப்படுவதுபோல ஏகாதிபத்தியவாதிகள்தான் தேசியவாதிகள் என்ற நாமத்தைத் தமதாக்கிக்கொண்டு, தேசியவாதிகள் மட்டுமே தேசத் துரோகிகள் என்று தூற்றப்படுகிருர்கள்— திராவிட இனத்தவர் மட்டுமல்ல, மராத்திய இனத்தவரும் பஞ்சாபிய இனத்தவரும் அசாமிய நாக இனத்தவரும் இந்த உண்மையைக் காணத் துவங்கியுள்ளார்கள்! மெள்ள 'உள்நாட்டு ஏகாதிபத்தியம்' என்ற மந்திரத்தை அவர்கள் உச்சரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

திராவிடநாட்டுச் சுதந்தரம்என்று திராவிடர் கூருமல், திராவிட நாட்டுப் பிரிவினை என்று கூறுகிருர்களே, அதற்குக் காரணமான சூழலே ஏகாதிபத்தியச்சூழல்தான். 'தேசியத்திலிருந்து பிரிவினை' என்று பொருள் படும்படி அது என்றும் வழங்கியதில்லை. ஏகாதிபத்தியத்திலிருந்து பிரியும் சுதந்தர தேசீயத்தையே குறிக்கிறது. ஒருவகையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து இந்தியாபிரிந்த பிரிவினை போன்றதுதான் அது. ஆனல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிந்தது ஒரு தேசீயமல்ல, ஒரு ஏகாதிபத்தியம். பெரிய ஏகாதிபத்திலிருந்து பிரிந்த சிறிய ஏகாதிபத்தியமாகவே சுதந்தரம் என்று தவருக அழைக்கப்படும் இந்தியப் பிரிவினை அமைந்தது. பெரிய ஏகாதிபத்தியம் அதை ஒரு ஏகாதிபத்தியப் பிரிவினையாக்காமல், இந்தியக் கூட்டுறவு ஏகாதிபத்திய பிரிவினை, பாகிஸ்தான் ஏகாதிபத்தியப் பிரிவினை என்று **இரண்டு** ஏகாதிபத்தியப் பிரிவினை ஆக்க முடிந்தன் காரணம் இதுவே. ஆனல் இந்திய ஏகாதிபத்தியத்திலிருந்து திராவிடம் ஒரு ஏகாதிபத்தியமாகப் பிரியப் போவதில்லை! ஒரு தேசீயமாகவே பிரிய இருக்கிறது. ஆயி

மன்றல் அழைப்பு

4-11-57 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தேவகோட்டை, மீன்பசலார் தெருவில் உள்ள எனது இல்லத்தில், எனக்கும் செல்வி **சங்கரவடிவுக்கும்** திருமணம் நடைபெறுகிறது.

திருவாளர்கள் எஸ். எம். ஏ. பாலசுப்பிரமணியம், சேலம் ஏ. சித்தையன், தாமரைச்செல்வன், வி. சிவப்பிரகாசம் பி.ஏ., பி.எல்., கே. எம். வல்லத்தரசு எம். ஏ., பி. எல்., இராம. வெள்ளையன் முதலியோர் வாழ்த்துரை வழங்குவர்.

தாங்கள் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பரிவினை நாடும்,

பா. பா. சு. மணி.

னும் இப்புண்ணிய பூமியின்
புண்ணிய மொழிகளில் ஏகாதி
பத்தியப் பிரிவினைக்குத் தேசிய
சுதந்தரம் என்ற பெயர் தரப்
பட்டது. தேசியப் பிரிவினையை
மட்டுமே, சுதந்தரம் என்று வழங்
காமல் பிரிவினை என்று வழங்கித்
தூற்ற எண்ணுகிறார்கள். ஆனால்
கூர்ந்து நோக்கினால், பிரிவினை
என்ற சொல் ஏகாதிபத்திய வாதி
கள் கண்ணையே குத்திக் காட்டும்
சொல் ஆகும். சுதந்தரத்தைப்
பிரிவினையாகவும் ஏகாதிபத்தி
யத்தை ஒற்றுமையாகவும் கருதுப
வரின் இந்திய ஏகாதிபத்தியத்
'தேசிய' வாதிகள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்
திலிருந்து இந்தியா, பாகிஸ்தான்,
பர்மா, இலங்கை, சிங்கப்பூர்
மலாயா, ஆகிய நாடுடன் எப்படி
பிரிந்து சுதந்தரம் பேரினவோ,
அப்படித்தான் திராவிட இயக்கத்
தவரும் திராவிடரும் திராவிடத்
தின் சார்பில் இந்திய ஏகாதிபத்தி
யத்தினிடமிருந்து பிரிந்து திராவிட
நாட்டுச் சுதந்தரம் அல்லது விடு
தலை கோருகின்றனர்; கோரிப்
போராடத் தொடங்கிவிட்டனர்.
ஆனால் சுதந்தரம் என்ற சொல்
சுதந்தர இயக்கத்தவரால்கூட
இங்கே வழங்கப்படாமல் ஏகாதி
பத்தியச் சூழல் காரணமாகவே
பிரிவினை என்றே சொல் பயன்
படுத்தப்பட்டது. செயற்கைச்சூழல்
களால் ஓர் அயலினத்துடன், அயல்
தேசியத்துடன் பிரிட்டிஷ் ஆட்சிக்
காலத்திலிருந்தே மற்றொரு தொலை
அயலினத்தால் திராவிடம் வலுக்
கட்டாயமாக, அத்தொலை அய
லினத்தின் வசதிக்காக இணைக்கப்
பட்டிருந்தது. இப்படி திராவிடம்
தொலை அயலினத்தவரால், அத்
தொலை அயலினத்துக்கு உள்ளா
னான, அவர்கள் ஏகாதிபத்திய
மாயை, ஏற்றதொரு அணிமைக்
கங்காணி அயலினத்துடன் கட்டிப்
போடப்பட்டிராவிட்டால், பிரிவினை
என்ற இத்தகைய சொல்லே
எழுந்திருக்காது. விடுதலை, சுதந்
தரம் என்ற சொல்லே வழங்கப்
பட்டிருக்கும்.

அது மட்டுமன்று. நாம் சுதந்தரம்
என்று சொல்லாமல் பிரிவினை
என்று முழங்குவதற்கு இன்னும்
ஒரு காரணமும் உண்டு. வடநாடு
தென்னாட்டை என்றும் வென்ற
தில்லை, ஆண்டதில்லை. ஆண்ட
இனத்தினிடமிருந்தே ஆளப்படும்
இனம் சுதந்தரம் கோரி முழக்க
மிடும். ஆனால் திராவிடம் கோரும்
சுதந்தரம் ஆண்ட இனத்தினிட
மிருந்தன்று, ஆளப்படும் ஓர் இனத்
தினிடமிருந்து. அதுவும் ஆளப்
படும் தேசியத்தினிடமிருந்தன்று,
ஆளப்படும் ஓர் ஏகாதிபத்தியத்
தினிடமிருந்து தான். அவ்வாறு
பிரிந்துதான் அது முன்போல் தனித்
தேசியமாக முடியும். பிரிவினை
என்ற சொல்லையே திராவிட இயக்
கத்தவர் வழங்குவதன் உண்மைக்
காரணம் இதுவே. அவர்கள்
ஆளும் இனத்தினிடமிருந்து சுதந்
தரம் கோரவில்லை, நம்முடன்
சேர்த்து ஆளப்பட்ட இனத்தினிட
மிருந்து பிரிவினை கோருகின்றனர்.
அந்தப் பிரிவினைக்குப்பின் தான்
அவர்களுக்குச் சுதந்தரம் கிட்
டும்!

'பிரிவினை' என்ற சொல் வழங்
கப்படுவதன் முழு உட் பொருள்
இதுமட்டுமன்று; பிரிந்தபின் திரா
விடம் உலகின் ஒரு பழம் பெருந்
தேசியத்தின் புத்துயிர் உருவாகக்
காட்சியளிக்கும். ஆனால் பிரிந்த
பின்கூடப் பாரதம் ஒரு தேசியமாக,
ஒரு பெருந் தேசியமாகக்கூடக்
காட்சியளிக்காது. அது அப்போதும்

ஒரு புதிய சிறிய ஏகாதிபத்திய பரப்பாகவே இருக்கும். அத்துடன் பிரிவினைக்குப்பின் திராவிடம் முன் ஆண்ட இனமாதலால், முன் செல்வ வளமும் புகழும் உடைய இனமாதலால், மறுபடியும் ஆட்சித் திறமையுடன், உலகில் செல்வ வளமும் புகழும் நாட்டி வருங் கால உலகில் சீரிய ஒரு நடுநாயகப் பங்கு கொண்டு மேம்பட்டு விளங்கும். ஆனால் பிரிந்த பின்னும் பாரதம் அவ்வாறு விளங்குதலரிது. ஏனெனில் அது என்றும் தன்னைத்தான் ஆண்டு பழகாத இனக் கதம்பம். வரலாறும், பாரதக் கூட்டரசே வெளியிட்டுள்ள இனமாகி நிலப்படமும் இதனைக் காட்டும். கிழக்கு வங்காளிகள் திராவிட-மங்கோலியக் கலப்பினத்தவர். அசாமியர் பண்படாத் திராவிட அதாவது நாக-மங்கோலியக் கலப்பினத்தவர். மேற்கே மராத்தியர், குஜராத்தியர் திராவிட-சித்திய இனக் கலப்பினத்தவர். விந்தியப் பகுதி பண்படாத் திராவிட-மங்கோலிய- ஆரியக் கலப்பினத்தவர். இமயப் பகுதி ஆரிய-திராவிடக் கலப்பும், சிந்து காசுமீரப் பகுதி ஆரிய-சித்தியக் கலப்பும் உடையது. மொழித்துறையிலோ கிழக்கும் தெற்கும் மேம்பட, வடக்கும் மேற்கும் படிப்படியாகத் தேய்வுற்று வரும் வளமுடையவை. என்றும் ஆளாத இத்தக் கதம்ப இன ஏகாதிபத்தியம் திராவிடம்போலத் தனித் தனி தேசிய இனங்களாகி, திராவிட நாகரிகத்தையும் பண்பாட்டையும் பின்பற்றிச் சமத்துவப் பண்பும் குடியாட்சிப் பண்பும் பெற்றாலன்றி, உலகில் தனக்குரிய இடம் பெற முடியாது. செல்வ நிலையிலோ வடதிசை ஏகாதிபத்தியப் பரப்பு இன்று தென்னகத்தைச் சுரண்டி வாழும் வழியின்றி மற்றவகை வளங்காணும் முயற்சியேயில்லாதது. அதன் விரும்பிய வறுமையைமாற்ற இன்றுபோல இனியும் ஒரு நாள் ஆசிய இனங்களைச் சுரண்டி வாழ எண்ணமுடியாது. திராவிடப்பண்பு பேணினாலன்றி புதிய தேசியங்கள் வகுத்துப்புதுவளம் காணமுடியாது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே, ஆண்ட இனமாகிய பிரிட்டிஷாரிடமிருந்து பாகிஸ்தானைப் போல, பர்மாவைப்போல, இலங்கையைப்போலத் திராவிடமும் நேராகப் போராடிப் பிரிந்திருந்தால், அந்த அரசியல் புரட்சியை நாம் பிரிவினை என்றே கூறியிருக்க மாட்டோம். சுதந்தரம், விடுதலை தன்னுரிமை என்றே கூறியிருப்போம். இப்போது தனியுரிமை கேட்பது ஆண்ட இனத்தவரிடமிருந்தல்ல, ஆண்ட இனத்தவரை வெளியேற்றிவிட்டு, அந்த ஆண்ட இனத்தவர் பிரியவிட்டது போக மீந்த பரப்பையெல்லாம், பிரிக்காது மீத்துத் தந்த பரப்பையெல்லாம் சுருட்டி வைத்துக்கொண்டு ஆள எண்ணுகிற, ஒரு தேசிய இனக் கதம்ப ஏகாதிபத்தியத்தினிடமிருந்தே-ஆளத் தெரியாத, ஆண்ட அனுபவமோ, தகுதியோ, ஆளுபவர்க்குரிய நேர்மை உணர்வோ இல்லாத ஓர் ஏகாதிபத்தினிடமிருந்து வென்று ஆளாது வெல்லாமலே மற்றோர் ஏகாதிபத்தியத்தின் தயவால்கிடைத்ததை அதன் தத்துப் பிள்ளையாக, கங்காணியாக ஆள வந்திருக்கிற கோழை ஏகாதிபத்தியத்தினிடமிருந்து கோரப்படும் தன்னுரிமையாதலால்தான், திராவிடராகிய நாம் இத்தனியுரிமையை இன்னும் பிரிவினை என்று கூறுகிறோம்.

- தொடரும் -

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்திலேந்திக் குடியன்காணும்
மாறாத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

கவிதைக் கலை

தமிழ்நாட்டில் கவிதை ஆர்வம் இப்போது மிக அதிகம். கிழமைக்கு ஆயிரம் இளங்கவிஞர்களைச் சந்திக்கும் நாம் இந்த உண்மையைத் தெரிவிக்கும்போது பெருமை கொள்கிறோம். கடந்த மூன்றாண்டு காலமாக 'தென்றல்' நடத்தி வரும் வெண்பாப் போட்டியின் மூலம், தமிழ் இலக்கிய உலகில் எத்தனையோ திறமைசாலிகள் வாய்ப்பின்றி முடங்கிக் கிடக்கிறார்கள் என்பதை நம்மால் அறிய முடிந்தது. ஆண்டில் இளைஞர்களானாலும், வெண்பாவில் அவர்கள் காட்டும் உவமைகள் படிப்போரின் உள்ளங்களை மெய்மறக்கச் செய்து விடுகின்றன.

கவிதை இலக்கணம் அறிந்தவர்கள் நீங்கலாக, கவிதை எழுத வேண்டுமென்ற பேராவல் கொண்டோர் எத்தனையோ பேர்—ஆயிரக்கணக்கானவர்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். தினந்தோறும் குவியும் வெண்பாக்களைப் பார்த்து இங்கே இதைக் குறிப்பிடுகிறோம். அவர்களின் வெண்பாக்கள், இலக்கணப் பிழையால் ஒதுக்கப்படுபவைகளோடு சேர்ந்து விடுகின்றன. ஆர்வம் மிகுந்த அந்த இளைஞர்களுக்கு கவிதை இலக்கணத்தை பயிற்றுவித்தால் மிக விரைவில் அவர்கள் கவிதைக் கலையில் தேர்ச்சிபெற முடியுமென நாங்கள் அடிக்கடி எண்ணுவதுண்டு. நம் ஆசையில் பத்தில் ஒரு பங்கு நிறைவேறக்கூடிய வகையில் மதுரை-வாசுகி பதிப்பகத்தார், 'கவிதைக்கலை' என்னும் நூலை வெளியிட்டிருக்கிறார்கள். நா. பார்த்தசாரதி என்னும் தமிழ்ப்பற்றாளர் அந்நூலை எழுதியிருக்கிறார். கவிதை இலக்கணம் அறிந்துகொள்ள விரும்புவோர் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பாட்டு, இனம்,—இவைபற்றி விளக்கிக் கூறியுள்ளார். மிகவும் பயனுள்ள நூல்.

இதை வெளியிட்டுள்ள வாசுகி பதிப்பகத்தாரின் முயற்சி பாராட்டுதலுக்குரியதாயினும், புத்தக அமைப்பு முறையில் அவர்கள் சிறிதும் கவனம் செலுத்தாதது பெரிதும் வருந்தத்தக்கதாகும். முகப்பை வனப்புள்ளதாக்கி, உள்ளேயும் சிறந்தமுறையில்-அச்சுப்பிழைகளில்லாமல் வெளியிட்டிருந்தால், பதிப்பகத்தாரின் 'கவிதைக்கலை' தமிழர்க்குப் பெரிதும் பயன்பட்டிருக்கும். நூல்களுக்கு முகப்புத்தான் முக்கியமன்று; முகப்பழகும் வேண்டும்! அவ்வளவுதான்!

64 பக்கங்கள் பன்னிரண்டணா. விலை அதிகமில்லை. உள்ள விலைதான். தமிழ் மாணவர்கள் இந்நூலைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:

வாசுகிப் பதிப்பகம்,

21, கிருஷ்ணபாளையம் 1வது. தெரு,

மதுரை.

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

"உண்மையில் சொல்கிறேன் தேவி! உங்கள் ஆடல் அன்று மிகப் பிரமாதம்! பழுவேட்டரையர் முதல் எல்லோரும் வானளாவப் புகழ்ந்தார்கள். ஆடல் அழகோடு புகழ் பாடவில்லையென்றுல், விமலர் ஏன் நவரத்னமாலையை பரிசாக அளிக்கிருர்?'' என்று ஆராய்ச்சி நடத்தினுள் எடுத்த பாதம்.

"ஏண்டி அவரை நமது மாளிகைக்கு வரவழைக்க முடியுமா?''

"அவரை அடைய என் உள்ளம் துடிக்கிறதடி. உனக்குத்தான் தெரியுமே. இதற்குமுன் நான் யாரிடமாகிலும் மனசை பரிகொடுத்திருக்கிறேனு? சீமான்களும் பூமான்களும் என் பாதத்தில் தவமிருந்த போதும் - எட்டி உதைத்திருக்கிறேனே! எல்லாம் தெரிந்தவளாயிற்றே நீ! அவரை படைய எப்படியும் முயற்சி செய்ய வேண்டும் எடுத்தபாதம்''—சுந்தரியின் வார்த்தைகளில் துடிப்பின் படபடப்பு இருந்தது. தூய ஆசையின் ஓசை கேட்டது.

"தேவி, தங்களின் நிலை எனக்குத் தெரிந்துவிட்டது. எதையும் கொஞ்சம் ஆலோசித்து செய்வோம்'' என்றுள் எடுத்தபாதம்.

தஞ்சையில் ஆண்டு விழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் அவசர அவசரமாக செய்யப்பட்டன. ஒன்பது நாட்கள் நடைபெறும் ஆண்டுவிழாவின் கோலாகாலத்தை விளக்குதலும் எளிதோ! விமலாதித்தன் ஆண்டுவிழாவில் பங்கு பெறவே தஞ்சை வந்துவிட்டான். இன்னும் ஒரு கிழமையே இருந்தது விழாவுக்கு. சுந்தரியும் பழுவேட்டரையரிடம் விடைபெற்று தஞ்சை நோக்கி பயணமானுள். அவள் நினைவுகள் உணர்ச்சி வயப்பட்டு, விமலாதித்தனை தேடி ஓடின.

தஞ்சை வந்ததும் முதல் வேலையாக அரண்மனையில் தங்கியிருக்க திட்டமிட்டாள் சுந்தரி. எடுத்த பாதம் அதற்கொரு யோசனை சொன்னுள். ராஜ ராஜனின் மகள் குந்தவையின் அந்தப்புரத்தில் சுந்தரி அங்கம் வகிக்க வேண்டும். முன்பே குந்தவை சுந்தரிக்கு அறிமுகமானவள்தான். குந்தவையின் உதவி கிடைப்பின் விமலாதித்தனை தான் அடையமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது சுந்தரிக்கு.

நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிக்க வேண்டும் என்னும் ஆர்வமுடையவள், சுந்தரி. அப்பொழுதே அரண்மனை அந்தப்புரம் சென்றுள். விழாமுடியும்வரை குந்தவையுடனிருக்க அனுமதி கோரினுள். குந்தவை சுந்தரியின் ஆடலில் அபிமானங் கொண்டவள். சுந்தரியின் ஆசையை உடன் அனுமதித்தாள். சுந்தரிக்கு தன் ஆசை உடன் ஈடேறுவது கண்டு அளவிலா மகிழ்ச்சி.

ஆண்டுவிழாவின் முதல் நாள் பிறந்தது. தஞ்சைமா நகரமெங்கும் குதூகலம் கொடி கட்டிப் பறந்தது. மக்கள் மாமன்னனையும், காவிரியையும் வாழ்த்தினர். விழாவினை சீரும் சிறப்புமாகக் கொண்டாடலாயினர். தினம் தினம் இரவுகளில் நடனம், இசை நிகழ்ச்சியென்று நடைபெறுவது வழக்கம். விழாவின் மூன்ரும் நாள் சோழகுல சுந்தரியின் நடன நிகழ்ச்சி அறிவிக்கப்பட்டிருந்தது. மூன்ரும் நாள் நடன நிகழ்ச்சியன்று, சுந்தரியின் ஆடல் பன்மடங்கு புகழ் பெற்றது. கண்டவரெல்லாம் களித்து வாழ்த்தினர். அவளுடைய அழகையும் ஆடலையும் மக்களெல்லாம் போற்றிப் போற்றி புகழ்ந்தனர்.

ஆண்டு விழா எட்டு நாட்களை கடந்துவிட்டது. இன்னும் ஒரே நாள்தான் பாக்கி. ஒன்பதாம் நாள் மற்றைய நாட்களைவிட பெரும் அளவில் அலங்காரம் செய்யப்பட்டு குதூகலமாக கழிக்கப்படும். அன்று தான் சோழ மன்னன் ராஜ ராஜன் பிரதான வீதிகளில் பவனி வருவது வழக்கம். அன்று இரவு நகர ஆடரங்கில் நாடகம் நடைபெறும். அந் நாடகம் அரசர் முன்னிலையில் நடைபெறுவது வழக்கம். ஆகையால் அரச குடும்பத்தில் எல்லோரும் நாடகமன்றில் குழுமியிருப்பர். வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருந்தது.

சோழர் குல சுந்தரி என்றுமில்லாதபடி அன்று அலங்காரம் செய்திருந்தாள். அவளுடைய அழகு வர்ணிக்கமுடியாததாக மிளிர்ந்தது. எடுத்தபாதம்கூட தலைவியின் எழில் நிலை கண்டு மலைத்துப் போனுள்.

"தேவி! இன்னும் அந்தப்புரம் செல்லாமலிருக்கிறீர்களே? குந்தவைதேவி காத்திருப்பார்களே!'' என்று நினைவுபடுத்தினுள் எடுத்த பாதம்.

சுந்தரி அவள் பேச்சைக் கேட்டு சிரித்தாள். அழகே வாய்விட்டு சிரிப்பதாகப்பட்டது எடுத்தபாதத்திற்கு. "விழா இன்ருேடு முடிவடைகிறதல்லவா, எடுத்தபாதம்?''

"ஆமாம், தேவி...!''

"என்னுடைய மன உளைச்சலுக்கும் இன்றுதான் கடைசி நாள்''

இன்று அந்தப்புரமே வெறிச்சோடியிருக்கும். விமலரை, அந்தப்புரத்தை அடுத்த மலர் வனத்தில் சந்திக்க முடிவு செய்துள்ளேன். இதற்கு உன் உதவி மிக மிகத் தேவை...

"விமலரைக் கண்டு விளக்கமாக எடுத்துச்சொல்லி. மலர் வதனத்திற்கு வரச்சொல்; நான் அவருக்காக அங்கே காத்திருக்கிறேன்'' என்றுள் சுந்தரி ஆர்வத்தோடு.

"இதுதானே, தேவி? அப்போ நீங்க நாடகத்திற்குப் போகவில்லையா?'' என்றுள் எடுத்த பாதம்.

"நாடகத்திற்குச் செல்லவில்லை. யாரும் கேட்டால் எனக்கு உடல் நிலை சரியில்லையென்று சொல்லிவிடு. நாடகம் தொடங்கப்பெற்று முடிவடைவதற்குள் விமலருக்காக மலர்வனத்தில் நான் காத்திருப்பேன். அதற்குள் வந்து என்னை விமலர் சந்திக்கவேண்டும். நீ உடனே சென்று அவரைக் கண்டு விஷயத்தைச் சொல்லு! நானும் போகிறேன்.'' என்று சுந்தரி கிளம்பினுள். எடுத்த பாதமும் அவளைத் தொடர்ந்து வேறு பாதையில் சென்று மறைந்தாள் சுந்தரி அவசர அவசரமாக நடையைக் கட்டினுள்.

★

அந்தப்புர நிலாமுற்றத்தில் குறுக்கும் நெடுக்குமாக உலவிக்கொண்டிருந்தாள் குந்தவை. அவள் விழிகள் அடிக்கொருதரம் வாயிலை நோக்கின. ஏமாற்றத்தோடு பார்வையை திருப்பிக்கொண்டன. அவள் எதிர்பார்ப்பவர்களை யாரும் வரக்காணும். சுந்தரி வேகமாக வாயிலை வந்தடைந்தாள். குந்தவை துடி துடிப்போடு அவளை நோக்கினுள். அவசரம் அப்பார்வையில் துள்ளியது.

"சுந்தரி, காலம் கடந்து வருகிருயே! உனக்காக எவ்வளவு நேரமாகக் காத்திருக்கிறேன்!'' என்றுள் குந்தவை அவசரத் தன்மையுடன்.

"காலம் தவறிவிட்டது. இளவரசி? அவசரமான காரியம் ஏதும் உண்டா? இது என்ன வேடம்? நாடகத்திற்குப் போகத் தயாராக வில்லையா, தேவி? உடைகளை மாற்றக் காணும்...! அலங்காரம் எல்லாம் பழையதாகவேயிருக்கிறதே!'' என்று படபடத்தாள் சுந்தரி.

"நாடகத்திற்கு நான் போகவில்லை. சுந்தரி, மனம் சரியாக இல்லை. உன்னுல் ஒரு காரியம் ஆகவேண்டும்.'' என்று துடித்தாள் குந்தவை.

"என்னுலா தேவி, உங்கட்குக் காரியம் ஆகவேண்டும்?'' என்றுள் வியப்போடு சுந்தரி.

"ஆமாம். சுந்தரி? சக்திவர்மரின் இளவல் விமலாதித்தரை நீ அறிவாயல்லவா?'' என்றுள் குந்தவை.

குந்தவையின் வார்த்தைகள் சுந்தரியை திணறச் செய்தன. குழப்பக்கடலில் அவள் விழுந்தாள்.

"ஆமாம்; தெரியும் தேவி!'' என்றுள் குழப்பமானக் குரலில்.

"அவர் தெற்கு ராஜவீதியில் தங்கியிருக்கிருர் தற்பொழுது. நாடகத் தொடக்க நேரத்தில் அவரை மலர்வனத்திற்கு வரச் சொல்லவேண்டும். மிக முக்கியமான செய்தியை சொல்லவேண்டும்! உடன் சென்றுவரச் சொல்கிருயா?'' என்று துடிதுடித்தாள் குந்தவை.

"இளவரசி! உங்கட்கும் விமலருக்கும்.. ...'' என்று நயந்தாள் சுந்தரி.

"ஆமாம், சுந்தரி! எங்களிருவருக்கும் உள்ளத் தொடர்பு உண்டு. இதை உன் மனத்தோடு போட்டுவை! சீக்கிரம் போய் வா, சுந்தரி...!'' என்று அவசரப்படுத்தினுள் குந்தவை.

"இதோ...'' என்று வெளியேறினுள் சுந்தரி, அவளுடைய நெஞ்சம் உடைந்து சுக்கு நூருகியது. துயரத்தின் இடிமுழககம் அவள் இதயத்தை தாக்கியது. சோகத்தைத் தாங்கியபடி நடந்தாள்.

★

எடுத்த பாதம் விமலாதித்தனை சந்தித்தாள். சோழகுல சுந்தரியின் மன உளைச்சலை எடுத்துச் சொன்னுள். அவள் மலர்வனத்தில் காத்திருப்பதையும் சொன்னுள். அவன் பாடு சங்கடமாகிவிட்டது. தன்னைத் தவருகப் புரிந்துக்கொண்டு விட்டாளே என்று வருந்தினுன். எடுத்த பாதத்தை அனுப்பிவிட்டு, சுந்தரியை சந்தித்து நிலைமையைத் திருத்தி அமைக்க புறப்பட்டான். 'அவள் ஆடலையே நான் பாராட்டினேன். விரும்பினேன்! அவள் அதற்காக என்னையே விரும்புகிருளே! இதென்ன வேதனை?' என்று மனம் நோக நடந்தான்.

"சுந்தரி!'' என்றுன் தாழ்ந்த குரலில். குனிந்திருந்த தலையை 'சடக்'கென்று தூக்கினுள் சுந்தரி. அவள் விழிகளில் தாபமும், பயமும், திகைப்பும் தளும்பின. இதயம் வேதனையாலும் திகைப்பாலும் நைந்தது. குந்தவையிடமிருந்து வந்ததும், விமலனைத் தேடிப் போவதாகத் தானிருந்தாள். பலவித எண்ணங்களால் குழம்பி மலர் வனத்திலேயே அமர்ந்துவிட்டாள். அவனே, அவள் எதிர்பாரத விதமாக வந்துவிட்டான். வாய் பேசாமல் எழுந்து நின்றுள்.

"நீ பெருந்தவறு செய்துவிட்டாய், சுந்தரி...'' என்றுன் விமலன். அவன் பேச்சில் அனுதாபம் இழைந்தது. அவள் பதில் பேசினபாடில்லை.

"சுந்தரி...!'' என்றுன் திரும்பவும். அவன் குரலைத் தொடர்ந்து; ஆர்வமும் அவசரமும் துடிக்கும் குரல் அவனை அழைத்தது.

"ஆமாம்.. "அத்தான்...!'' என்று அழைத்தபடி குந்தவை அவசர அவசரகாக வந்தாள். அவளுடைய அழைப்பும் வரவும் அவர்களை கதிகலங்கச் செய்தன. இருவரும் கலங்கும் இதயத்தோடு குந்தவையையே பார்த்தனர். குந்தவை விமலனருகில் வந்துவிட்டாள்.

விமலன் யாருக்கும் கேட்காத வகையில் 'சோழகுல சுந்தரி' என்று முணு முணுத்தான். ★

அடுத்த இதழில்...

அத்திப்பழம்

ம. கி. தசரதன், எம். ஏ.

எழுதும்

அற்புதத் தொடர்கதை

ஆரம்பமாகிறது!

கலப்புத் திருமணம்

இலங்கைத் தோழர் திரு. எம். மிக்கேல் அவர்களின் மகன் **எம். எஸ். பாண்டியனுக்கும்,** இலங்கை அந்தோனிதாசன் அவர்களின் மகள் **ஏ. டி. செயசீலிக்கும்** 6-10-57 அன்று கொழும்பில் கலப்புத் திருமணம் நடை பெற்றது. மணவிழாவிற்கு இலங்கை தி. மு. க. பொதுச் செயலாளர் தோழர் ஜே. கே. கே. சுந்தரம் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றினுர்.

வாழ்க மணமக்கள்!

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

**இரா செல்லச்சாமி,
திருப்பத்தூர்.**

முதலடியும் ஈற்றடியும் நாற்சீர் பெற்று, ஈற்றயல் அடி முச்சீர் பெற்று ஒரு பாட்டு வரின் அதை நேரிசை ஆசிரியப்பாவில் சேர்க்க வேண்டுமா? இணை குறள் ஆசிரியப்பாவில் சேர்க்க வேண்டுமா?

ஆசிரியப்பாவில் எல்லா அடியும் நாற்சீர் பெற்று, ஈற்றயலடி மட்டும் முச்சீராய் இருந்தால் அது நேரிசை ஆசிரியப்பா.

முதலடியும் ஈற்றடியும் நாற்சீராய், ஏனை அடிகள் இரு சீராகவோ முச்சீராகவோ குறைந்து வந்தால் அது இணைக் குறள் ஆசிரியப்பா.

கேள்விக்குரிய ஆசிரியப்பா இந்த இரு வகையாகவும் இருக்க இடமுண்டு. ஏனென்றால் கேள்வியில் பாவிற்கு இத்தனை அடிகள் என்பதும் கூறப்படவில்லை. முதல், ஈறு, ஈற்றயல் தவிர மற்றைய அடிகள் பற்றிய விவரமும் தரப்படவில்லை. இந்நிலையில் ஈற்றயலடி முச்சீராயமைந்த இணைக் குறளாசிரியப்பாவாகவும் அது இருத்தல் கூடும். ஏனைய முதல் ஈறல்லாத அடிகள் இரு சீர், முச்சீராக நின்றால், அல்லது அது நேரிசை யாசிரியப்பாவாகவும் இருக்கலாம், அவ் ஏனையடிகள் யாவும் நாற்சீராக இருந்தால்!

★

வே. தங்கத்துரை, மதுரை.

(அ) நாலடியார் இயற்றப்பட்ட காலத்தில், முனிவர்கள் மத்தியில் அதற்கிருந்த வரவேற்பு எத்தகையது?

(ஆ) திருவள்ளுவருடைய சகோதரர்கள் மூன்றுபேர் என்றும் சகோதரிகள் நாலுபேர் என்றும் கபிலர் கூறுகின்றாரே இக்கூற்று உண்மையா?

(அ) 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்ற பழமொழியில் இரண்டு திருக்குறளையும் நாலு நாலடியாரையும் குறிக்கிறது. நாலடியார் திருக்குறளுக்கு முற்பட இடம் பெற்றுள்ளது. தவிர, 'வேளாளர் மரபுக்கு வேதம்' என்று 'அதைச் சிறப்பிக்கும் பழைய வெண்பா ஒன்றும் நாலடியார் பதிப்புக்களில் காணப்படுகிறது. நம் பாட்டனார் காலம் வரை, அதாவது 19-ம் நூற்றாண்டுவரை திண்ணைப் பள்ளிக்கூட முறையில் புலவர் என்று வெளியிற் செல்லும் மாணவர் இறுதியாகப் படிக்கும் ஏடுகள் நாலடியாரும் திருக்குறளுமே யாகும்.

நாலடியாருக்குச் சங்க காலத்திலும் திருக்குறளுக்கு மிகவும் பிற்படாத மதிப்பு இருந்ததென்றே கூறலாம். உண்மையில் திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கில் சேர்க்கப்படுவதற்கே 'நாலடியார்' 'முதுமொழிக் காஞ்சி', 'இன்னா நாற்பது' 'இனியவை நாற்பது' போன்ற சங்க கால ஏடுகளே காரணமாய் இருந்திருக்க வேண்டும்.

நாலடியார் சங்க காலத்துக்குப் பிற்பட்டது, நெடுங் கணக்கு ஏடுகள் பெரும்பாலானவையுமே பிற்பட்டது என்று கருதியவர் உண்டு. ஆனால் இதற்கு ஆதாரமாகக் காட்டப்பட்ட கூற்றுக்கள் வலிமையுடையன அல்ல. 'சித்தார்த்த சமாஜம்' போன்ற சமயப் பற்று மட்டும் விஞ்சிய நிலையங்கள் இச்சமண ஏடுகளைப் பிற்காலத்தனவாகக்காட்டப் பெரும்பாடுபட்டன. ஆனால் சமயம் காரணமாகக் காலம் வரையறுப்பதானால், சைவத்துக்கு முற்படச் சமணமும் அதற்கும் முற்படப் புத்த நெறியுமே தென்னகமெங்கும் மிகுதி தழைத்திருந்தது என்பது கவனிக்கப் படுதல் வேண்டும். சைவத்துக்கும் வைணவத்துக்கும் அரசியல், தேசியப் பெருமை ஏற்பட்டது, தலை நாயன்மார் (மூவர்) காலங்களிலும் நம்மாழ்வார் காலத்திலும்தான். அதற்குமுன் பாண்டியரும் பல்லவரும் சங்கரும் ஆந்திரரும் சமண புத்த நெறிகளையே வளர்த்தனர்

(ஆ) திருவள்ளுவர் பற்றிய கதை எல்லாப் புலவர் கதைகளையும் போலவே முழுப் புளுகு. கம்பர், புகழேந்தி கதைகளைப் போல அவ்வளவு அழகான புளுகுகூட அல்ல. ஆனால் 'கபில ரகவல்' என்ற பாடல் அதற்குச் சான்று தந்து மெய்ப்பிப்பதுபோலத் தோற்றுகிறது. ஆனால் இன்று அதுவே பொய்ப்பிக்கும் சான்றாகி விட்டது. ஏனெனில் கபில ரகவல் சங்க காலக் கபிலர் நடையோ இயல்போ அற்றது. அதில் கூறப்படும் கருத்துக்கள் சாதியைக் கண்டிக்கும் ஒரு அணிமைக் காலத்துச் சித்தர் பாடலின் பாணியில் கேள்வியாலறிந்த வள்ளுவர்பற்றிய ஒரு அணிமைக் காலக் கதையையும் திறம்பட ஏற்று நடித்துள்ளது.

கபிலர் பெயரால் உள்ள நூல் போலவே வள்ளுவர் பெயரால் ஒன்றல்ல, பல போலி நூல்கள் உள்ளன. திருவள்ளுவர், ஞான வெட்டியான் என்றஏடுகள்இரண்டு உள்ளதாக அறிகிறோம்-அவற்றிலும் திருவள்ளுவரே தன் கதை கூறுகிறதாகத் தெரிகிறது.உண்மை என்று கொள்ளக்கூடுமானால் இவை புரட்சிகரமான அகச்சான்றுகள் ஆக வேண்டும். ஆனால் அவற்றின் பொய்மை வெளிப்படை. இயற்றிய ஆசிரியர் காலத்தில் இந்தக் கதைகள் வழங்கின என்பதையும் அதைக்கொண்டு புதிய சித்தர்கள் பழமை மதிப்புப் பெற முயன்றனர் என்பதையுமே இவை காட்ட வல்லன.

★

மு, சுந்தரேசன் சென்னை 1,

மணிமேகலையின் பால் அன்பு கொண்ட உதய குமாரனுக்கு இளமை நிலையாமையை அறிவுறுத்த எண்ணி, அங்கே இயல்பாக வந்த, முதியவள் ஒருத்தியைக் காட்டிப் பண்டு வனப்புடையனவாக இருந்த அவள் உடலுறுப்புக்கள், இப்போது வன்மை குறைந்து அழகிழந்து இருத்தலைக் குறித்து மணிமேகலை கூறியது யாது?

மணிமேகலை 20-வது அடி உதயகுமாரனை வாளால் எறிந்த காதை 40வது அடி 'நரைமுதாட்டி ஒருத்தியைக் காட்டி' என்பது முதல் 66-வது அடி 'முளி முதிர் தெங்கின் உதிர் காய் உளங்கல்'என்பதுவரை பண்டுவனப்புடையவளாக இருந்த அவள் இளமை உறுப்புக்கள் இன்றடைந்த கேட்டை உறுப்பு உறுப்பாக 26 அடிகளில் மணிமேகலை ஒப்புமை காட்டி உடற்பற்றில் வெறுப்பூட்டுகிறாள். 67 முதல் 69 வரை மூன்று அடிகளில் இவற்றின் முடிவான நீதி புகட்டுகிறாள்.

41 முதல் 66வரை அடிகளின் தொகுத்த பொருள்: கருமணல் போன்ற கூந்தல் சற்று வெண்மணல்போல நரைத்தது. இளம் பிறைபோன்ற நெற்றி வெள்ளைத் தோலின் திரையாகியுள்ளது. வில் போன்ற புருவம் இப்போது உறங்கிய இறால் மீன் போலாயிற்று. கழு நீர்ப்பூப்போன்ற செல்லறிக் கண்கள் சிவிழுந்தன. இமிழம் பூப் போன்ற மூக்குச்சளி சிந்தி நிற்கின்றது. முத்துப்போன்ற பற்கள் சுரை வித்துப்போலப் பிறழ்ச்சியடைந்துள்ளன. இலவம் பூப்போன்ற மணமுடைய இதழ் வெந்த இறைச்சிபோல நாறுகிறது. வள்ளைக்கொடியின் தண்டுகள்போன்ற வடிந்த காதுகள் வற்றிய இறைச்சித்துண்டுகள் போலிருக்கின்றன. பெருமைக்குரிய மார்பகங்களே வெற்றுப்பைகளாயின. மூங்கில்போன்ற பசுந் தோள்கள் தென்னை படல்போல முறிந்து விழுகின்றன. விரல்களில் அழகிய நகங்கள் கோரமாகத் தளித்து நிற்க நரம்பும் தோலும் வற்றி எலும்பாகக் காட்சியளிக்கின்றன. வாழைத் தண்டுபோன்ற துடைகள் உலர்ந்த தாழைத் தண்டு போலாய்விட்டன. அம்புப் புட்டில் போன்ற கணைக்கால் எலும்பும் நரம்புகளும் வெளியே தள்ளிக் கொண்டு விகாரமாய் உள்ளன. தளிர்கள் போன்ற அடிகள் தேங்காயின் உலர்ந்த துண்டுகள்போல இருக்கின்றன.

இவற்றைத் தொடுத்து நீதியுடன் முடிக்கின்ற (66-69) அடிகள் வருமாறு.

**பூவினும் சாந்தினும் புலால்
மறைத் துயரத்துத்
தூசினும் மணியினும்
தொல்லோர் வகுத்த
வஞ்சம் தெரியாய்
மன்னவன் மகன்!**

இதன் பொருள் வருமாறு:

'இந்த உடல் நாறும் புலாலாய் ஆனது; அதை நம் குடியின் மூத்தவர்கள் மணமுடையபூக்கொண்டும் மலர் கொண்டும் மறைத்தார்கள். அழகுடைய ஆடைகளாலும் அணிமணிகளாலும் பொதிந்து அழகுபடுத்தினார்கள். அரசர் மகனே! இந்த வஞ்சத்தை நீ அறியமாட்டாயா?'

★

நவம்பர் இதழ்-முதல் வாரம் வெளிவருகிறது!

முல்லை

இலக்கியத் திங்களிதழ்

கண்ணதாசன் தரும் —
ஆட்டனத்தி-ஆதிமந்தி

பன்மொழிப்புலவர் எழுதும் —
தமிழ்ப் பண்பு

நா. பாண்டுரங்கன், எம். ஏ., தீட்டும் —
மலர்

இளஞ்சேரலின் —
நினைவுகள்

இவற்றோடு
'மனிதர்கள் நல்லவர்கள்தான்!'
ஐநூறு குழந்தைகளின் தந்தை!
ஆண்டவன் தமிழனடா!

மற்றும்
க. அறிவழகன், எம். ஏ.
பி. டி. அந்தோணிராஜா, எம். ஏ., எம். எஸ்ஸி.
வ. சம்பந்தன், பி.ஏ.

இன்னும்
ஏராளமானவர்களின் எழுத்தோவியங்கள்.
புதிய கலைப்பகுதி
எழில்நிறை வண்ணமுகப்பு. ஏராளமான பக்கங்கள்
விலை அணா எட்டு

முல்லை :: சென்னை-6.

ஏ, இலக்குவனா !

[மாயமானைப் பின்தொடர்ந்து இராமன் சென்றபிறகு, அவன் அவலக்குரல் கேட்கிறது. சீதையும் இலக்குவனும் குடிலில் இருக்கின்றனர். சீதை இலக்குவனை, இராமனைக் காப்பாற்ற வேண்டுகிறாள். இலக்குவன் போகாமல் நிற்கவே கடிந்துரைக்கின்றாள். சொற்கள் சொல்லம்புகளாகத் தாக்குகின்றன. இலக்குவனின் பண்பை வால்மீகி அச்சொற்களின் மூலம் உருவாக்குகின்றான். அச்சொல்லோவியத்தின் மொழியாக்கமே இக்கவிதை. ஆரண்ய காண்டம் 45வது சருகத்தின் 20-லிருந்து 28 பாடல்களின் மொழிபெயர்ப்பு.]

மூலம் : வால்மீகி இராமாயணம்

மொழிபெயர்ப்பு : ந. அலி, துறையூர்

செந்தாமரைக்கண்ணன் சீராளன் இராமன்
தீராத ஆபத்தில் சிக்குண்டான் என்றே
நொந்திருக்கும் என்னோடு உரையாடுகின்றாய்
நெகிழாமல் வருந்தாமல் நிற்கின்றாய் சிலையாய்
வந்தனைகள் பலபேசும் வஞ்சகனே ! இன்றுன்
வார்த்தையிலே நம்பிக்கை எனக்கில்லை. தூய
சந்திரனும் களங்கத்தைப் பெற்றிருத்தல் போல
சரிபாதி களங்கத்தைப் பெற்றிருக்கின்றாய்நீ.

நற்குலத்தில் பிறந்துவிட்ட புல்லுருவி உந்தன்
நரிச்செயலுக் கென்றுமே இசைவுதர மாட்டேன்
பொற்கலசம் ஈந்தாலும் என்வாழ்வின் துணையைப்
பிரிந்துவிட்டு குவலயத்தில் உயிர்வாழேன், நீயோ
நிற்கின்றாய் நெடுமரம்போல், நெஞ்சகத்தில் உறையும்
நித்திலமோ உயிர்க்காக மன்றாடு கின்றார்.
சொற்கலையில் யான்மயங்கி வீழ்ந்திடுவேன் என்று
சுகக்கனவு காண்கின்றாய்; ஒருக்காலும் மாட்டேன்.

பெருவேந்தன் திருக்குமரன் உயிர்போனால் உனக்குப்
பெரும்பேறு என்றெண்ணிக் களிக்கின்றாய்; நானோ
இருவேலின் நுனிகளிடை அகப்பட்டுத் தவிக்கும்
ஏந்திழையாய் இருக்கின்றேன் என்செய்வேன் ஐயோ !
பரதனவன் ஆணைக்கு அடிபணிந்து இன்று
பார்வேந்தன் திருமகனைக் காப்பாற்ற நீயும்
விரைவாகச் செல்லவில்லை; ஆதலினால் உந்தன்
வெறிச்செயலில் மதிமயங்கி கணவனைநான் இழக்கேன்.

மணிமார்பன் என்கணவன் இறந்துவிடின் அடியேன்
மடிந்திடுவேன் மறுநொடியே அன்றில்போல் இங்கு
மணித்தேரில் எனையேற்றி அழகுவலஞ் சுற்றி
மகிழ்வூட்டும் என்னாசை அத்தானுக் கல்லால்
அணிமாலை எவருக்கும் இடமாட்டேன்; அதனின்
அரிவாளால் என்னுயிரை மாய்த்திடுவேன்; இன்று
துணிவாகச் சொல்கின்றேன் இலக்குவனா ! இந்தத்
தோகைமயில் முகிலின்றேல் நடமாடா துண்மை.

வெண்பாப் போட்டி-7.

ஈற்றடி : சாதியினால் தோன்றும் தடை.

முடிவு தேதி 16-11-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

இந்த ஆண்டு

★

தென்றல் பொங்கல் மலர்

★

உயர்ந்த காகிதத்தில்
கிரௌன்-பெரிய அளவில்
தயாராகிறது !

★

விலை ?

— 3ம் பக்கத் தொடர்ச்சி —

"துறைபல திறமூழ்கித்
துயருறு மகளிரைப்போல்
.................யான்
அவலங்கொண் டழிவனோ"

பிற பெண்டிர் கணவன் இறந்த பின்னர் கங்கை, யமுனை போன்ற நதிகளில் மூழ்கி வருந்துவதுடன் 'வரும் பிறப்பிலாவது என்னை அவருடன் வாழச் செய்க' என வேண்டுவராம். அதுபோல 'நான்' துறை மூழ்கி வாழமாட்டேன் என்பாள் கண்ணகி.

மேலே கண்ட இரு செயல்களையும் ஊன்றிக் காணும்போது வடவரின் பொருந்தாக் கொள்கைகள் புகுத்தப்பட்ட காலத்திலும் தமிழகப் பெண்கள் அப்பொருந்தாச் செயல்களில் விருப்பம் கொள்ளவில்லை என்பது வெளிப்படையாகின்றது.

மேலும் 'கனாத்திறம் உரைத்த காதை'யில் தேவந்திகை என்ற பார்ப்பனப் பெண், கணவனைப் பிரிந்திருந்த கண்ணகியைச் சோம குண்டம், சூரிய குண்டம் முதலிய குளங்களில் நீராடினால் பிரிந்த கணவனைப் பெற்று இன்பம் அடையலாம் என்று கூறியும், தமிழ்ப் பெண் கண்ணகி "பீடன்று" என்று ஒரே சொல்லால் பொருந்தாத வழக்கம் என மறுத்துவிடுகிறாள். இம்மறுப்பின் பின்புறம் தமிழர் பண்பாடு வேறு-வடவாரியர் பண்பாடு வேறு என்பது புலனாகின்றது. சங்க காலத் தமிழர்கள் இன்று போலவும், இதுபோலவும் குளங்களில் நீராடுவதனால் அகத்தின் கண்ணுள்ள மாசினை அகற்றவோ, நினைத்ததைப் பெறவோ முடியும் என்று முயன்றதும், கருதியதும் இல்லை என்பதை இவ்வரலாறு விளக்குகின்றது.

'அடைக்கலக் காதை'யில் 54 முதல் 74 வரிகள் வரையில் இளங்கோ வடவாரிய நாகரீகம் ஒன்று கூறுகிறார். 'ஒரு பார்ப்பனத்தி தவறுதலாகக் கீரிப்பிள்ளையைக் கொல்ல, அவள் கணவன் அப்பாவம் போக்க இயலாது காடு புக்கிறான். தான் செய்த பாவம் போகவும், கணவன் வீடு திரும்பவும் கோவலனைக் கண்டு பொருள் பெற்று, அதனைக் கொண்டு பிராமணனுக்குத் தானம் செய்து கீரிப்பிள்ளையைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொள்ளுகிறாள்,' அப்பார்ப்பனப்பெண்.

கோவலன் திருடன் என்ற சந்தேகத்தாலே 'சிலம்பு கள்வன் கையதாகில் கொன்றச் சிலம்பு கொணர்க' என்று பாண்டியன் கட்டளையிட்டான். தவறுதலாகவே கோவலன் கொல்லப்பட்டான், பார்ப்பனத்திக் கீரிப்பிள்ளையைத் தவறுதலாகக் கொன்றதைப்போல். ஆனால் தன் தவற்றினைக் கண்ணகி காட்ட உணர்ந்த பாண்டியன் தன் செங்கோல் வளைந்ததை எண்ணி உயிர்விட்டான் என்றே காணுகிறோமே அன்றி ஒரு பிராமணனுக்குத் தானம் செய்து கோவலனைக் கொன்ற பாவத்தைக் கழுவியதாகக் காணவில்லை. கொன்ற பாவம் தானத்தால் போகும் என்பது வடவாரியர் பண்பாடு; அதன் பின்னால் தமிழன் பண்பாடு கொன்றமைக்குரிய தண்டனை உயிர்நீத்தல் அன்றி வேறல்ல என்பது விளங்குகின்றது.

கி. மு. 1000 அல்லது 2000ல் அதாவது முதற் சங்க காலத்தில் தோன்றிய நூல்கள் இன்று கிடைக்கப்பெற்றால் தமிழகத்தின் ஆரியக் கலப்பற்ற பண்பாடுகள் - திராவிடப் பண்பாடுகள் என்பன மேலே கண்டதைப் போலவே காணக்கூடும்.

-கதிரவன்

நிர்வாணப் பக்கிரிகளின் அட்டூழியம்

நாடாளும் அரசாங்கத்தையே அஞ்சவைக்கும் கொடுமை!

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

காரணம் தாம் அறிவுபெற்றும் ஆழ்ந்துணரவல்லரல்லரே என்ற குறைபாடே!

மாணவர் அரசியலில் ஈடுபடுதலை காங்கிரஸ் தடுப்பது அரசியலில் மாணவரின் கல்வியூக்கத்தைக் குறைத்திடும் என்ற அக்கரையினாலன்று. அரசியல் ஊழலை மாணவர் குறிப்பாக தென்னக மாணவர் உடனறிந்து விடுகின்றார். மக்களுக்கு எடுத்துரைக்கவும் அவர்களின் ஊக்கத்திற்கு உறுதுணையளித்து அரசாங்கத்தை எதிர்த்திடவும் இன்றியமையாத சக்திகளாகி விடுகின்றார் என்ற வெறுப்புணர்ச்சியால்,பீதியால் பேரச்சத்தால் காங்கிரஸ் அரசியல்வாதிகள் ' மாணவர்களுக்கு அரசியல் ஆபத்தை விளைவிக்கும்'' என எச்சரிக்கின்றனர். வடநாட்டு மாணவர்போல் நம்நாட்டு மாணவர் அரசியலார் அக்கிரமம் அறிந்தும் வாளாயிருக்கும் கொடுமை மனத்தினரல்லர். குறையை எடுத்தியம்பித் தாக்கும் நெஞ்சுரம் கொண்டவர்; நீதியின் வழி நிலைநாட்ட வேண்டுமெனில் எதிர்கட்சியைச் சார்வர் மாணவர் அன்றோ? பதறுதிருக்குமா பருந்தினர் கூட்டம் இதைக் கண்டு?

காங்கிரஸ் அரசியலில் மாணவர் ஈடுபடலாமா காங்கிரஸ் ஆதரிக்கலாமா? ஆகா! தாராளமாக! நேரடியாக! அதற்கு பதக்கமும் வருங்காலத்தில் பதவியும் உண்டு! அலகாபாத் உயர்தரக் கல்லூரிகளில் பல்கலைக்கழகத்தில் ''காந்தி பிரார்த்தனை சமாஜ்'' என்ற பெயரில் மாணவர் கழகமொன்று இயங்குகின்றது. மாதமொருமுறை சமாஜ் அங்கத்தினர் கூடுவர். அண்ணல் காந்தியின் அகிம்சா தர்ம போதனை, பொறுமை, விட்டுக்கொடுத்தல், சகோதரதத்துவர், இவைதாம் கழகத்தின் ஒரு சில கொள்கைகள் என்று நீங்கள் நினைத்தால் அது முற்றிலும் தவருகும். காந்தியின் பெயரால் காங்கிரசின் இன்றியமையாமை - நேருவின் புகழ் - ராஜேந்திரரின் மகிமை - ஏக பாரத இணைப்பின் அத்தியாவசியம் — எதிர்க்கட்சிகளின் அவசியமின்மை — புதிய ராம ராஜ்ய அமைப்பு-இளம் உள்ளங்களில் வார்க்கப்படும் விஷப்பிரச்சாரம் இதுதான். இராமனின் பேராற்றல், இராவணனின் துர் ஆற்றல் உவமைக்கு பன்முறையும் கழகக் கூட்டத்தின் உரைகளில்எடுத்தியம்பப்படுகின்றது. கழகம் தொடங்குவதே ''ரகுபதி ராகவ ராஜாராம்'' என்ற பக்தி பஜனையுடன். அரசியலில் ஈடுபடாதீர் என எச்சரிக்கும் மதியூகிகளின் நேர்மை ஏழியிதுவா? இன்று இதனிலும் பல படிகள் முன்னேறிவிட்டனர் காங்கிரஸ் அதிபர்கள். ''இளைஞர்காங்கிரஸ் கழகம்'' பகிரங்கமாக கல்லூரிகளில் புகுந்துள்ளது. அரசினர் அங்கீகாரம் பெற்று அரசியல் கட்சியாக மாணவரிடையே உலவ தன் பிரச்சாரத்தைப் புகுத்திட முனைந்துள்ளது. ''காந்தி பிரார்த்தனை சமாஜ்'' கழகங்களில் அலகாபாத்தில் உள்ள பலவற்றிற்கு நேருவின் காங்கிரஸ் குலக்கொழுந்து இந்திரா காந்தி பிரதிநிதியாக உள்ளார். காங்கிரசை ஆதரிக்கும் கழகமிதல்லவென பலர் கூறுவதுண்டு. கடந்த பொதுத் தேர்தலின்போது காங்கிரஸ் வெறிப்பிரசாரம் நடத்துவதற்கு ஏன் ''காந்தி பிரார்த்தனை சமாஜ்'' வடக்கில் பல தொகுதிகளில் நியமிக்கப்பட்டது? இக் கழகத்தின் தலைவர்கள் காங்கிரஸ் ஆதரவாக அல்லது அக் கட்சியினராக இருத்தலவசியம். இது காந்தீய வழி செல்லவா? அது காங்கிரஸ் சூதுமதிக் கிசைப்ப நடத்தலா என்பது நல்லுணர்வுள்ளோருக்கே புரியும்! நம்நாட்டு மாணவர் இவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டுமெனக் கூறும் பெரியார்கள் நேர்மைக்கு முடிவு காண அவர்களைத் தூண்டுகிருரே யொழிய நாட்டு நலன் கோருகின்ருரா?

இந்துமதச் சாக்கடையின் வாயிலே அலகாபாத் என்ரேம். அலகாபாத் சாதுக்களின் உற்பத்தி மாடம்! இவர்களை அலகாபாத்தில் முக்கியமாக ''திரிவேணியில்'' காணலாம். கங்கையும் யமுனையும் இணையும் நிலையத்தில் மூன்ருவது தேவியாக சரசுவதி யென்பாளும் இவ்விரு நீர் இணைப்புக்கடியில் மறைந்தூற்றுவதாக — பிரவாகிப்பதாகவுள்ள புராணப் புனைந்துரையைத் திடமாக நம்புவர். கல்லாத பாமரர் மட்டுமன்று. கற்றுத் தேர்ந்த அனைவரும் இதைப் பலமாக நம்புகிருர்கள். காலத்திற் கொவ்வாத காலத்திற்கடுக்காத கருத்திற்கெடுக்காத மேனுட்டாரின் பரிகாசத்திற்கும் பலமுறை இலக்காகிய, அநாகரிகமான அவலட்சண திருவிழாக்கள் வருடத்தில் 10, 20 என உண்டு. அச்சமயம் ''சங்ஹட்'' (நதிகள் இணையும் சந்தி) இதற்குத் திரிவேணி என்பர். (மூநதிகள் எனப் பொருள்படுமாறு) அந்நாட்களில் லட்சம் லட்சமென மக்கட்திரள் கொள்ளும்; மந்திரங்கள் ஓதப்படும்! மத்தளங்கள் ஆர்க்கும்! சங்கு ஒலிக்கும்! நட்சத்திரம், லக்கனம் காலம் அனுஷ்டித்து பகுத்தறிவிழந்த பாமரர் முதல் படித்தவர்வரை சேரும் சக்தியும் கலந்த திரிவேணி சங்கத்தில் மூழ்கியெழுவர். நீரோ, அழுகற் குழம்பு! சாக்கடை வீச்சம்! பிணக்கவும்! இத்திரிவேணியில் ஏழை இந்துக்கள் தமது இனத்தார் உறவினர் முதலோரின் பிணங்களைத் தாழ்த்தும் பண்டைய வழக்கத்தை இதுவரை கையாளுகின்றனர். சில சமயங்களில் எங்காவது ஓரிரு நாள், கல் இடுக்கில் சிக்கிக் கிடக்கும் பிணம் தன்னை விடுவித்துக் கொண்டு பாயெனப் பிளந்த நீரில் மிதந்திடும் காட்சி பலரைப் பீதிக்குள்ளாக்கிவிடும். இவைகளின் காரணமாகவே இங்கு காலரா முதலிய நோய்கள் பரவுகிறதெனும் உண்மையை இப் பகுத்தறிவிலா மக்கள் நம்பத் தயாராயில்லை. திருவேணியில் பெரு நோயால் பீடிக்கப்பட்டோர் மூழ்கி யெழும்பின் பீடை நீங்கிடுவர் என்ற உறுதியான நம்பிக்கை இவர்களுக்குண்டு.

இளைஞர்கள் இத்திருவிழா நாட்களில் இங்கு குமிழ்வர். பக்திப் பிரவாகமா? இல்லையில்லை. முக்தி நிலை தேடியா? முற்றும் பிழை! மூநதியில் மூழ்கியெழுமாறு ஆங்குகூடும்முல்லைக் கொடிகளின் எல்லையிலா எழிலுருவை அவர்கள் துவைத்து ஈரவுடையில் நிற்கும்போதும், உடை மாற்றுப் படலத்தின் போதும், கடைக்கண்ணுலும், இடைக்கண்ணுலும் கண்டு கண் விருந்து பெருதற்கு! உமிழ்நீர் விழுங்கி உள்ளச் சாந்தி பெறுதற்கு! சாதுக்களே இக்காட்சியைக் கண்டுகளிக்கப் புறப்பட்டு விடுகின்ருரெனின் இளைஞரைப் பற்றிக் கேட்பானேன்?

சாதுக்கள்! நீறதனுல் மேனி முழுதும் அலங்கரித்தோர்! முட் படுக்கையில் துஞ்சுபவர். மூன்றிலைமேல் தியானிப்பவர்-புலித்தோல் சந்நியாசி! சடாமுனிவர்க்கம்! வேல்குத்திக் கரகம் தூக்கும் ''தென்னட்டு மாதிரி''கள் ராம நாமமிட்ட விஸ்வாமித்ரர் ''மாடல்'' ரிஷிகள்! உரித்திராட்சப் பூனைகள்! தருப்பை ஏந்திகள்! கோவணதாரிகள்! அரை நிர்வாண உயிரினங்கள்! இவ்வனைவரும் அலகாபாத்தின் பல பகுதிகளிலிருந்து அங்கு சூழ்ந்து விடுவர். இச்சமயத்தில் அலகாபாத் நகரம், செல்லின் அங்கு ஓர் தனி ஒளியை புத்தழகை காண நேரிடும்! மக்கட் தொகையில் அங்கு வேடதாரிகள் சாமியார் இனத்தவர் தான் பெரும்பான்மையினரோ என்ற ஐயம் தோன்றும்! மக்கள் இவர்களுக்கு ''தான்'' (பிச்சையிடுதல்)செய்து மறுவுலக நித்திய இன்பத்திற்கு வழிகோலுவர். வீபூதி வேண்டி வினையகற்றுவர். கருமம் தொலைத்த காவியுடையாளரின் தாள்தொட்டு கண்ணிலொற்றி இன்புறுவர். தாம் நேர்ந்த கடனுக்காக இவர்களைத் தூக்கிக் கொண்டு ஆங்குள்ள 'மந்திர'' களை (இந்துக் கோவில்) வலம் வரும் மக்கள் பலருண்டு. இது போல் பக்தர் பலரகம்! நிர்வாண சாதுக்கள், வடக்கில் வியத்தற்குரிய காட்சியல்ல. தெய்வீகப் போதையாலோ, தமக்கென இறைவன் வகுத்த தனிக் கொள்கையாலோ இங்ஙனம் உளராம். ஆண்கள் மட்டுமன்று பெண்களும் உளர்!!

வடக்கு தெற்கென இடக்கு பேசுபவர் நாமென வடவர்கள் நம்மை அண்மையில் வர்ணித்தார்கள். வந்தாருக்கு வாழ வழியமைத்து, வரண்ட தமிழகத்தைப்போல் வடநாடு தென்னகத் தமிழருக்குத் தன்னகத்தில் வணிகச் சுதந்திரம் அளித்துள்ளதா? சிந்து, போரா, பஞ்சாபி, வங்காளி, பிகாரி, பம்பாய்வாலா, ஆப்கான் இவ்வாறு வணிகம் வணிகமென வகை வகையாய்ப் பேசி, வஞ்சமும் சூதும் பேணி எம்மவர் வளத்தைக் கவரும் வக்ரபுத்திக்காரர் இங்கே! தெருவோரமாய் திக்கற்று இரந்து வாடும் தமிழர் கூட்டம் அங்கே! வடநாட்டில் தமிழன் வட்டிக்கடை வைத்தல் கூடுமா? ஷேவாக்ராமும், மொடுமல்சும், லால்சந்தும் இங்கு வணிகக் கொள்ளையடிப்பது போல் தமிழ் வியாபாரி ஒருவனுயினும் அங்கு சில்லரைகடை வைத்தோ வெற்றிலை வியாபாரம் செய்தோ சிறமுதல் சேர்த்தல் கூடுமா?

அரசாங்க அனுவலகங்களில் கணக்கர்களாக (குமாஸ்தாக்களாக) தென்னவர் சிலர் தொழிலாற்றுகின்றனர். தமிழரிடம் அலகாபாத் வாசிகள் காட்டும் வேற்றுமையும் வெறுப்புணர்ச்சியும், துவேஷமும் தூற்றலும் அளவற்றது. சிற்றூண்டிச் சாலையிலோ பொதுக்கூட்டத்திலோ, சலனப்பட மன்றத்திலோ, ''மதராசி''யை அடுத்து இருப்பதைக் கேவலம், மலத்தை அடுத்து நிற்பதுபோல் அம் மக்கள் வெறுத்து விடுகின்றனர்.

ஒரு முக்கிய குணுதிசயம் தென்னுட்டார் (அங்கு வாழ்பவர்) இடையே காணமுடிகின்றது. அங்ஙனம் கூறுதல் மானம் பறிபோதலெனக் கருது கின்றனர். தங்களைத் தென்னுட்டவர் இல்லையென, அதனிலும் ''மதராசி'' (தமிழர்) இல்லையென நிரூபிக்க முயல்வது இவர்களது வழக்கம். தங்களைத் தென்னுட்டார் என்று வடவர் ஐயப்படாதபோது பெரும் நிம்மதி! தெரிந்துகொண்டாலோ பீதி! தமிழர் இத்தகு திரைமறைவில் வாழ்வதற்குக் காரணம் வடவர் தம்மிடம் காட்டும் வெறுப்புணர்ச்சியே யாகும். நற்குணம் வாய்ந்த ஒரு சிலர் இருப்பினும் பெரும்பான்மை வடவர் தென்னுட்டு வைரிகளே. இது இன்று வடக்கு செல்லும் நம்மவர் பொதுப்படக் கற்றுக்கொள்ளும் பாடம், காணும் உண்மை! இதுதான் அலகாபாத் (அ)நாகரீகம்! நாம் ஒத்து இருக்க முடியுமா?

-ப. இசைநவராசன்



6. ஊடல் வெண்பா.

இந்தாபார் உன்னைத்தான் என்மேலே தப்புத்தான் !
முந்தாநாள் சொன்னதைநீ எண்ணாதே—செந்தாழம்
பூவே! புதுத்தேனே! புத்திபுத்தி! பொன்னிறத்துப்
பாவையே கண்பார் பணிந்து.

—பா. பாலகிருட்டினன், தாராபுரம்.

❁

கொஞ்சும் சிலம்புடையாள் கோலமணி மேகலையாள்
மிஞ்சுமெழிற் குண்டலத்தாள் மெல்வளையாள்—செஞ்சொன்
மறையுடையாள் வாழ்கென்றேன்; மாக்காதற் செல்வி
அறைவிட் டகன்றாள் அழ.

—சி. சிவராமலிங்கம், சென்னை.

❁

சொட்டும் எழில்முகத்தில் சோகத்தின் முத்திரையேன்
பட்டுப்போல் மேனியளே பாகேயென்—கட்டழகி
கட்டுக் கடங்காமல் காதலரே உம்மினைவால்
பட்டதுவே தூக்கம் பயந்து.

—"அமுதன்", சென்னை-2.

❁

செஞ்சொற் கவியின்பம் சேர்க்கும் உயிரனையாய்
துஞ்சற்கண் ஊடுவதும் தூநெறியோ?—அஞ்சாதீர்!
ஊடுதற் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

—அ. கிருஷ்ணன், சரவணபட்டி.

❁

புகையுமிழுந் தேநீர் பருகுங்கால் சுட்ட
வகையெண்ணி நான்திகைக்கக் கண்டு—நகைத்துப்பின்
நீருகுத்து நின்றுமே ஊடினாள் நெஞ்சத்தில்
யாருள்ளி ஏங்குகிறீர் என்று.

—து. பெருமாள், சென்னை-11.

❁

உலகம் பெரிதல்ல; உம்முயிர்க் காதல்
நலந்தான் பெரிது; நடுவில்—குலம்பற்றி
ஊரார் உரையால் உயர்கோவே நீர்மறந்தால்
ஓரா(து) இறப்பேன் ஒழிந்து.

—வே. திருவேங்கடம், இராதாபுரம்.

❁

காவில் தனியிருந்தேன்; கட்டழகி பின்வந்தே
பூவினும்தன் மென்கரத்தால் கண்புதைத்தாள்—மேவியதோர்
இன்பத்தால் 'யார்'என்றேன்; 'வேறுளரோ கண்புதைப்பார்'
என்றழுதே ஊடினாள் இன்று.

—புத்தூரான். க. புதுப்பட்டி.

❁

ஓராமற் கொண்ட ஒருதலைக் காதலென்று
தேராதார் கூட்டுவார் சேடியே—பாராய் நீ
ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்.

—பொ. வ. அருணாசலம், பிரம்பை-11.

❁

வெஞ்சமரில் வேலதனை வீரமுடன் ஏந்திநிற்பேன்
கொஞ்சுமொழி வேல்விழியால் கூர்பாய்ச்சும்—அஞ்சுகமே
ஊடிப் பிணங்குவதும் உன்னழகோ எந்தனுடன்
கூடியின்பப் பூவுலகம் கூட்டு.

—கோ. வீ. துரை, கருவை.

❁

மெய்வாடி வாடி மிகுகின்ற தாபத்தால்
நையும் உளந்தன்னை நாடாமல்—பொய்நாடிப்
போனவரே மீண்டும் விரும்பேன் உமையென்றாள்
கோனவனை ஊடல் குறித்து.

—ந. ஜாபர், சித்தயங்கோட்டை.

"நேற்று வருவீரென் றெண்ணி நிலாமுற்றில்
காற்றைச் சுவைத்தபடி காத்திருந்தேன்—மாற்றுடையில்
தூற்றல் பொழுதில் துரிதமுடன் ஏன்சென்றீர்?
மாற்றாளின் மார்பணைக்க வா?

—முத்தூரான், பொள்ளாச்சி.

❁

வண்ண மயிலே வடிவழகே பைங்கிளியே
எண்ணத் தித்திக்கும் இன்பமே—கண்மணியே
ஓர்முத்தம் தந்து உடலூடிக் கூடுதற்குக்
கூர்விழியே வந்தணைத்துக் கொள்.

—இளம்பரிதி

❁

உன்னைப் பிரியேன் ஒளிநுதலே இவ்வுலகில்
என்றென் துணைவர் இதழ்விரித்தார்—கன்னலே!
மேலுலகில் என்னை மறப்பீரோ என்றாடிச்
சேல்விழியில் நீர்சுமந்தேன் தேர்ந்து.

—ந. அலி, துறையூர்.

❁

அத்தான் எனவழைக்கும் அஞ்சுகத்தைக் கூப்பிட்டு
முத்தமொன்று தந்து முழுநிலவே—இத்தரையில்
யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

—சு. செல்லக்கணபதி, கரந்தை.

❁

'செய்குற்றம் தீர்த்து, செறிதொடீஇ! சேர்'என்றாய்
உய்விக்கும் சிந்தை உணர்கிலான்—பொய்மிக்க
தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.

—அறவீரன், மலைப்பட்டு.

❁

கட்டிக் கரும்பேயென் காதற் கனிச்சுவையே
மட்டில் சிறப்பெய்தும் மாணிழையே!—கேட்டிடுவாய்
ஏடும் புகழ்பாடும் எவ்வுயிரும் கொண்டாடும்
ஊடல் சிறப்பாம் உணர்.

—செ. சீனிவாசன், சலகண்டபுரம்.

❁

"காதல் மொழிபேசிக் கள்ளின்பம் காணுங்கால்
மோதல் எதற்காகும் மொய்குழலாய்"—"போதும்பொய்!
கள்ளி உமக்காகக் காத்திருப்பாள்; சென்றின்ப
வெள்ளத்தில் மூழ்கி விடும்".

—கு. பரிமளம், சுமுதி.

❁

நல்லாற்றால் நாடி நயம்புரியும் காதலற்
கெல்லையின்றித் துன்பம் இழைக்கின்றாய் - இல்லையில்லை
இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.

—ந. சுப்பையா, அச்சன்புதூர்.

❁

"கொஞ்சவரின் மிஞ்சுகிறீர் கொய்தணைத்துக் கெஞ்சுகிறீர்
வஞ்சியினி ஏய்க்க வளைந்துவிடேன்"—"அஞ்சுகமே!
ஊடப் பொழுதில்லை உன்தோழி வந்திடுவாள்
கூடிச் சுகம்பெறலாம் கூறு."

—பொ. சண்முகம், காரைக்குடி.

❁

வைதனள் என்றே வருந்தற்க என்தோழா
மெய்தனை நீயுணர்வாய்; மேவலிலே—பொய்யாள்
செறூஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறூஅர்போன்(று) உற்றார் குறிப்பு.

—எஸ். கே. சாகுல் அமீது, சென்னை-1.

❁

பாட்டிசைத்துக் கள்ளுண்டு பாடுமிள வண்டே என்
வீட்டகத்தாள் ஈந்திட்ட வெம்மையினைக்—கேட்பாய்நீ
நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.

—குளிரெழிலன், சாலைப்புதூர்.

❁

கன்னல் மொழியாள்; கயல்விழியாள், என்துணைவி
பின்சென் றிழுக்கப் பிணங்கினாள்—இன்பமே!
உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து.

—அ. தமிழரசி, மம்சாபுரம்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு